பக்கங்கள்: 18

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 15 ஞாயிற்றுக்கிழமை 01.12.2019 கதிர் 26

## இது ரகசியம் அல்ல!

சுவிஸ் தூதரக அதிகாரி வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டு வாகனத்துக்குள் வைத்தே அச்சுறுத்தி விசாரிக்கப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் இப்போது தென்னிலங்கையில் பெரும் பரபரப்புக்குள்ளான விடயமாகியுள்ளது. பக்கம் 02 ›››

# ஜெனீவா வாக்குறுதிகளில் சறுக்கினால் நாடு சட்டபூர்வ தகைமையை இழக்கும்

## அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை



கொழும்பு, டிசெம்பர் 01

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இலங்கை அளித்த வாக்குறுதிகளை இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அரசும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் சர்வதேச மட்டத்தில் தனது சட்டபூர்வ தன்மையை இலங்கை இழக்கும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். பக்கம் 03 ›››

## கோட்டாபய வெற்றி பெறுவதற்கு சம்பந்தன், சுமந்திரனே காரணம்!

### சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 01

பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு ஆசனங்களைப் பெறக்கூடாது, அதனால் தமிழர்கள் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும். மாற்று அணி உருவாகக்கூடாது எனச் சுமந்திரன் சொன்னார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தனிச் சிங்கள வாக்கிலேயே கோட்டாபய வெற்றி பெற்றார். சஜித்தை ஆதரிக்கும் முடிவெடுத்து, தீவிர பிரசாரம் செய்து, கோட்டாபய வெற்றியடைய காரணமாகச் பக்கம் 03 ›››


## சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தல்; உண்மை வெளிப்படவேண்டும்

### சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்தல்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 01

சுவிஸ்தூதரகத்தில்வேலை செய்த பெண் அதிகாரி கடத்தப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மையை அரசு வெளிப்படுத்தவேண்டும். இல்லையேல் சர்வதேசத்தின் மத்தியில் அது அவநம்பிக்கையை ஏற்படுத்துமென ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். பக்கம் 03 ›››



## முக்கிய வழக்குகளை விசாரித்து வந்த மற்றுமொரு அதிகாரியும் இடமாற்றம்!

### கோட்டா அரசின் அதிரடி தொடர்கிறது

கொழும்பு, டிசெ.01

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை, ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்து வந்த உதவி பொலிஸ் அத்தியட்சர் எஸ்.பி.திசேரா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பக்கம் 03 ›››

## மோடியின் வலியுறுத்தலுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். வரவேற்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 01

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியுள்ளமையை பக்கம் 02 ›››

## நீராவியடிக்கு நேற்று வந்தார் புதிய புத்தர்!



முல்லைத்தீவு, டிசெ. 01

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள விகாரையில் பிரதிஷ்டை செய்வதற்காக சுமார் 3.5 அடி உயரமான புத்தர் சிலை ஒன்று நேற்றுக் கொழும்பு பாணந்துறைப் பகுதியைச் சேர்ந்த அசங்க சாமர தலைமையிலான பக்கம் 02 ›››

## ஆளுநர் அலுவலகத்தை மாற்றும் முஸம்மில்லின் முடிவால் சர்ச்சை



குருநாகல், டிசெ.01

முஸ்லிமான முஸம்மில் வட மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் அந்த மாகாணப் பிக்குகள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ள நிலையில், பக்கம் 02 ›››

## இலங்கை வருகின்றார் பாகிஸ்தான் அமைச்சர்

கொழும்பு, டிசெ. 01

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் பக்கம் 02 ›››

## அமெ. செல்கிறார் பஸில்

கொழும்பு, டிசெ. 01

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தபாகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ மீண்டும் பக்கம் 02 ›››

## முன்னாள் அமைச்சர்கள் சிலர் மீது நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள்!

கொழும்பு, டிசெ. 01

கடந்த ஆட்சிக் காலத்தில் முதலீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்த லஞ்சம் பெற்றமை உள்ளிட்ட நிதி பக்கம் 03 ›››

## பாதுகாப்புச் செயலாளருடன் பிரதமர் மஹிந்த ஆலோசனை!



கொழும்பு, டிசெ. 02

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன நேற்று முன்தினம் மாலை சந்தித்துத் தேசியப் பாதுகாப்புத் தொடர் பக்கம் 02 ›››

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷா மஹ்மூத் குரேஷி தலைமையிலான குழு இலங்க வரவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணியளவில் இந்தக் குழு இலங்கைக்கு வரும் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அமைச்சர் தனது பயணத்தை முடித்த பின்னர் நாளை இங்கிருந்து புறப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியுள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பொறுப்பேற்ற பின்னர் கமால் குணரத்ன, அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார். சந்திப்பின்போது, பிரதமரும் பாதுகாப்புச் செயலாளரும் தேசிய பாதுகாப்புக் குறித்து ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டனர் எனப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

# பிச்சைக்காரர்களை அகற்றுவதற்கு மேல்மாகாணத்தில் நடவடிக்கை

மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து யாசகர்களையும் அகற்றுமாறு மாகாணத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஹம்பாந்தோட்ட ரிதியாகமவிலுள்ள யாசகர்களிற்கான மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைவாக, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்த்தனவினால் மாகாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிற்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சகல பொலிஸ் நிலைய பகுதிகளிலுமுள்ள யாசகர்கள் உடனடியாக பொலிசாரால் அகற்றப்பட்டு, யாசகர் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பபடவுள்ளனர்.

அதேவேளை, ரயில் நிலையத்தில் யாசகம் பெற தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை முன்னரும் அமுலில் இருந்த போதும், முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இனிமேல் இது இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என ரயில்வே சேவைகள் இராஜாங்க அமைச்சர் சீ.பி.இரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## மோடியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்றுள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அதற்காக இந்தியாவுக்குத் தனது நன்றிகளையும் தெரிவித்துள்ளது .

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் செய்தியாளர் மாநாட்டை நடத்திய ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் புதிய ஜனாதிபதி தனது முதலாவது விஜயமாக இந்தியாவுக்குச் சென்று இருக்கிறார். இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எனப் பல முக்கியஸ்தர்களை அவர் அங்கு சந்தித்துப் பேச்சு நடத்தி இருக்கிறார். இந்தப் பேச்சுக்களின்போது இலங்கை – இந்தியப் பொருளாதார நிலைமைகள், இந்துசமுத்திரப் பிராந்தியத்தை ஒரு சமாதான வலயமாக மாற்றுவது, இந்தியா – இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன.

இதற்கும் மேலாக இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு இப்போது இருக்கக்கூடிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்தியத் தரப்பிலிருந்து வலியுறுத்தப்படுகின்றது.

ஈழத்தமிழர் பிரச்சினையில் தமது அக்கறையைக் காட்டியதற்காகவும், ஈழத்தமிழர் பிரச்சினை என்பது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதை இந்தியா மீண்டும் இலங்கைக்கு உணர்த்தியதற்காகவும், அந்த விடயங்களை பத்திரிகையாளர் மத்தியில் வெளிப்படையாகக் கூறியமைக்காகவும் இந்தியப் பிரதமருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் நாங்கள் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

ஏற்கனவே இந்த 13ஆவது திருத்தத்தில் பல்வேறுபட்ட அம்சங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்பதை நாங்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். ஜே.ஆர். ஜெயவர்த்தன பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்ததன் பிற்பாடு முதன்முதலில் ஏற்படுத்தப்பட்ட வடக்கு – கிழக்கு இணைந்த மாகாண சபையில் அப்பொழுது பொலீஸ் படை ஒன்று உருவாக்கப்பட்டது. அது தமிழ் மக்கள் சார்பாக உருவாக்கப்பட்டது. ஆனால் வடக்கு – கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டவுடன் அந்தப் பொலிஸ் படையும் கலைக்கப்பட்டு விட்டது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்குக் குறைக்கப்பட்ட வகையில் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளன. அதே போல மாகாணங்களுக்குச் சொற்ப அளவில் காணி அதிகாரங்கள் இருக்கின்றன. இவை எதுவும் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதேபோல் கல்வியை எடுத்துக்கொண்டால் மாகாண சபைகளுக்கான ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கும் அனுமதி இருக்கிறது. இங்கே பார்த்தால் ஆசிரியர்களை இணைத்துக் கொள்வது என்பது இன்னும் மத்திய அரசின் செயற்பாடாகக் காணப்படுகின்றது.

ஆகவே 13ஆவது திருத்தத்தில் உள்ள அனைத்தையும் இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை என்பது முதல் விடயம்.

எனவே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும். ஏற்கனவே மஹிந்த பதின்மூன்றாவது திருத்தம் போதாது, அதற்கு அப்பால் செல்வோம் என்று இந்தியப் பிரதமர் மோடியிடம் கூறியிருந்தார். அதேபோல ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கூடச் சொல்லியிருந்தார். ஆனாலும் அது நடக்கவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் ‘தமிழ் மக்களுக்குத் தேசிய இனப் பிரச்சினை என ஒன்றும் இல்லை. இங்கிருந்த பயங்கரவாதப் பிரச்சினை ஒழிக்கப்பட்டுவிட்டது. அவர்களுடைய பிரதேசங்கள் அபிவிருத்தி அடைந்தால் போதும். அபிவிருத்தி அடைந்தால் பிரச்சினை தீர்ந்துவிடும்’ என்ற ஒரு கருதுகோளைக் கொண்டவராகவே இப்போதைய ஜனாதிபதி உள்ளார்.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில் அந்த ஜனாதிபதி முன்பாக வைத்து 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா கூறியிருக்கிறது – என்றார். (ஐ-07)

## நீராவியடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினால் முல்லைத்தீவுப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பௌத்த விகாரையில் எந்தவித கட்டுமானப் பணிகளையும் செய்யக் கூடாது என்று நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளபோதும் நேற்று புதிதாக புத்தர் சிலையை கொண்டு வந்து வைத்து விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அத்துடன் விகாரைக்கான தளபாடங்களும் நேற்றுக் கொண்டுவரப்பட்டன.

ஆட்சிமாற்றம் இடம்பெற்றதை அடுத்து ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த விகாரைக்கு புதிதாகப் புத்தர் சிலை கொண்டுவரப்பட்டமை பல்வேறு சிக்கல்களை உருவாக்கலாம் எனப் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் காரியாலயத்தை மாற்றுவதற்குப் புதிய ஆளுநர் எடுத்துள்ள தீர்மானம் மற்றுமொரு பிரச்சினையை உருவாக்கும் நடவடிக்கையாக அமைந்து விடும் என வட மேல் மாகாண சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாளிகை என்ற பெயரில் பிரபலம் பெற்றுள்ள வட மேல் மாகாண சபையின் கட்டடத்துக்கு அருகாமையிலுள்ள புராதன கட்டடம்தான், இதுவரையில் ஆளுநர்களாக நியமனம் பெற்றவர்களின் காரியாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனையே ஆளுநர் முஸம்மில் தனக்கு வேண்டாம் எனப் புறக்கணித்துள்ளார் என தேசிய ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் காரியாலய வளாகத்தின் ஒரு பகுதி பௌத்தர்களின் மத வழிபாட்டு சின்னங்கள் பலவற்றைக் கொண்டு காணப்படுவதனாலேயே அதனை அவர் புறக்கணித்துள்ளார் என வட மேல் மாகாண சபையின் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்த ஊடகம் அறிவித்துள்ளது.

இந்தக் காரியாலயத்தைப் பயன்படுத்துவதைப் புறக்கணித்ததன் காரணத்தினால், புதிய கட்டடமொன்றை நோக்கி ஆளுநர் செயலகப் பொருள்கள் மற்றும் தளபாடங்கள் அனைத்தையும் இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளதாகவும், இதனால், ஊழியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனவும் அவ்வதிகாரி கூறியுள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தல் முடியும் வரையிலேயே தற்போதைய ஆளுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில், குறுகிய கால நியமனம் பெற்றுள்ள புதிய ஆளுநரின் விருப்பத்துக்காக, ஆளுநர் காரியாலயத்தை மாற்றுவது புதிய பிரச்சினையொன்றை உருவாக்கியுள்ளதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மூன்று மாத காலத்துக்காகக் காரியாலயத்தை மாற்ற எடுத்திருக்கும் நடவடிக்கையினால், பாரிய நிதி வீண்விரயம் செய்யப்படுவதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் இந்தத் தகவல் வெளியானபோது அதைச் செய்தியாக வெளியிடவே பல ஊடகங்கள் பின்னடித்தன. எங்கே தாங்கள் முதலில் செய்தியை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தினால் வெள்ளைவான் தங்களையும் தேடி வந்து விடுமோ என்ற பயம், பீதி பல ஊடகவியலாளர்களுக்கு.

ஆனால், இப்போது விடயம் சூடு பிடித்துவிட்டது. பல ஊடகங்களுக்கும் ‘துணிச்சல்’ பிறந்து விட்டது போலும். வெளுத்து வாங்குகின்றன.

அதுவும் இன்றைய ஞாயிறு பதிப்பில் வெளுத்து வாங்கும் என எதிர்பார்க்கலாம்.

குசுகுசுச் செய்திகளுக்குக் காத்துக் கிடக்கும் வாசகர்களுக்கு இன்றைய தென்னிலங்கை வார இதழ்கள் நல்ல தீனியை அள்ளிக் கொட்டும் என எதிர்பார்க்கலாம்.

சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தி, அச்சுறுத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது சந்தேகத்தைத் தொடர்ந்து வெளியிடுகின்றார்.

தமது தனிப்பட்ட உரையாடல்களிலும் அதனை அவர் வலியுறுத்துகின்றார்.

ஒன்றில் அப்படிச் சம்பவம் நடைபெற்றிருக்கவில்லை. அது சோடிக்கப்பட்ட ஒன்று. அல்லது, அரசுக்குக் கெட்ட பெயர் வேண்டிக் கொடுப்பதற்காக சில தரப்புகள் வேண்டுமென முன்னெடுக்கும் ‘பக்கா’ நாடகம் அது என்பது மஹிந்தரின் கருத்தாக இருக்கின்றது.

அப்படியும் இருக்கலாம். மறுக்கமுடியாது. ஆனால், உண்மையான – நேர்மையான – சோடிக்கப்படாத – புலன் விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் உண்மை கண்டுபிடிக்கப்பட்டு அம்பலமாகும். அது நடக்குமா? தெரியவில்லை.

ஆனால், ‘‘சம்பந்தப்பட்ட பெண் அதிகாரி புலன் விசாரணையாளர்கள் முன்தோன்றி வாக்கு மூலமளிக்காத வரை சரியான விசாரணைகளை நடத்த முடியாதிருக்கின்றது. சம்பந்தப்பட்ட சி.சி.ரி.வி. கமராக்கள் எல்லாம் சோதித்தாகி விட்டன. அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றமைக்கான சான்றுகள் ஏதும் இல்லை.” – என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட முறையில் கூறுகின்றார்.

முறைப்பாடு இல்லாதமையால் சரியான புலன் விசாரணையை ஆரம்பிக்க முடியவில்லை என்பது அவரது வாதம்.

அது சரியாகவும் இருக்கலாம். ஆனாலும் பாதிக்கப்பட்ட பிரதான தரப்பிடம் இருந்து முறைப்பாடு கிடைக்காமல் இருந்தாலும் புலன் விசாரணைகளை நுணுக்கமாக முன்னெடுக்க முடியும்.

அதற்கு உதாரணத்துக்கு நான் தள்ளிப் போக விரும்பவில்லை. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விடயத்தில் இருந்தே அதனைப் பார்க்கலாம் என்று கூற விரும்புகிறேன்.

யுத்தத்தின் உச்ச கட்டத்தில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இலக்குவைத்து ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்கல் நடத்தப்பட்டதும் அதில் அவர் அதிர்ஷ்டவசமாகத் தப்பிப் பிழைத்தமையும் வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்.

2006 டிசெம்பர் முதலாம் திகதி அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் அதில் பிரதானமாக இலக்கு வைக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பொலிஸ் வாக்குமூலம் ஏதும் அளிக்கவில்லை. பதினொரு மாதங்கள் கடந்து 2007 நவம்பரில்தான் பொலிஸ் முறைப்பாட்டு வாக்குமூல மளித்தார்.

அது போன்ற தாமதத்தைத் தான் சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரியும் எதிர்பார்க்கின்றாரோ என்னவோ...!

மேற்படி தாக்குதல் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகின்றமையால் இன்னொரு விடயமும் நினைவுக்கு வந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இன்னும் வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. ஐந்து எதிரிகள் மீது குற்றச்சாட்டு, மூன்றாம் எதிரியை சில மாதங்களுக்கு முன் அவருக்கு எதிராக போதிய ஆதாரங்கள், சான்றுகள், சாட்சியங்கள் இல்லை எனத் தெரிவித்து நீதிமன்றம் விடுதலை செய்து விட்டது.

நான்காம் எதிரியையும் அவ்வாறே விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அந்த வழக்கில் முன்னிலையாகி தற்போது வாதாடிவருகின்றார். நான்காம் எதிரியும் விடுதலையாவதற்கு வாய்ப்புண்டு.

அதுவல்ல விடயம். 2015 ஜனவரியில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமக்கு எதிரான குண்டுத் தாக்குதல் முயற்சியின் எதிரியை மன்னிப்பளித்து விடுவித்து பெரும் பரபரப்பையும் அரசியல் ஆதாயத்தையும் தேடிக் கொண்டார்.

தற்போதைய புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அதை ஏன் செய்யக்கூடாது? எனக்கு புதிய ஜனாதிபதியை நேரில் சந்திக்க வாய்ப்புக் கிட்டும் போது இது குறித்து ஒரு யோசனையை – ‘ஐடியாவை’ – அவர் காதில் நிச்சயம் போட முயற்சிப்பேன்...!

- மின்னல் -

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா செல்லத் தயாராகி வருகிறார். எதிர்வரும் 5ஆம் திகதி அமெரிக்கா செல்லும் பஸில் ராஜபக்ஷ அங்கு மூன்று மாதம் தங்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்று அவரது தலைமையின் கீழ் தற்போது புதிய அரசு ஆட்சியமைத்துள்ளது. எனினும் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்ற பின்னணியில் பஸில் ராஜபக்ஷ மூன்று மாதங்கள் அமெரிக்காவில் தங்கியிருக்க உள்ளார்.

தேர்தல் நடக்க உள்ள பின்னணியில் பஸில் மூன்று மாத காலம் அமெரிக்காவில் தங்கியிருக்கப்போவது பொதுஜன பெரமுனவில் பலருக்கு பிரச்சினையாக மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பஸில் ராஜபக்ஷ வெளிநாடு செல்லும் முன்னர் அவரை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமித்து அவருக்கான அலுவலகத்தைத் திறக்குமாறு பிரதமர் மஹிந்த, ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

எனினும் பஸில் ராஜபக்ஷ தற்போது மிகவும் அமைதியாக இருந்து வருகிறார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் கூட அவர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டாபய வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தனும், சுமந்திரனும் மாறினார்கள்.

. இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

சுமந்திரனின் ஒற்றுமை அழைப்பு தேர்தல் வாக்கை இலக்காக கொண்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் விடுதலைப்புலிகளும் பங்குபற்றினர். பின்னர், சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றவர்களின் நடவடிக்கை காரணமாக கொள்கைகளிலிருந்து தடம் மாறியது கூட்டமைப்பு.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் அமைப்பொன்றுக்கு யாப்பு, அமைப்புக்கான வடிவமோ இல்லாமல், உதிரிக் கட்சிகளின் கூட்டாக – தேர்தல் காலத்தில் மட்டும் கூடிப் பேசுவது, வாக்குகளை சுவீகரிப்பது என அவர்கள் இருந்தனர். அதற்கு அப்பால் கூட்டு முடிவுகளை எடுக்க அவர்கள் ஒருபோதும் தயாராக இருந்ததில்லை.

2002 முதல் 2015 வரை ஒன்றாகப் பயணித்து, இந்த விடயங்களை நாம்வலியுறுத்தி வந்தோம். அப்படியொன்றைச்செய்ய முடியாதென அவர்கள் திட்டவட்டமாக கூறிவிட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாது, அதற்கு யாப்பு தேவையில்லை, அதற்கு மத்திய, செயற்குழுக்கள் தேவையில்லையென்ற கோணத்தில்தான் செயற்பட்டார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவர்கள்சம்பந்தன், சுமந்திரன், மாவை ஆகியோர் எடுப்பதுதான் அங்கு முடிவாக இருந்தது. ஏனைய கட்சிகளின் கருத்துக்கள் கணக்கிலெடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாகத்தான்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து கஜேந்திர குமார் பொன்னம்பலம், தமிழர் விடுதலைக் கூட்டணி, நாங்கள் வெளியேறினோம். இந்த வெளியேற்றத்திற்கு அவர்கள்தான் மூலகாரணமாக இருந்தார்கள்.

எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெரமுன எடுக்கவிடக்கூடாது எனவும் சுமந்திரன் சொல்கிறார். 2015ஆம் ஆண்டு தேர்தலில் சம்பந்தன், சுமந்திரனால் பல வாக்குறுதிகளைக்கொடுத்தார்கள். பின்னர் அரசுடன் இணைந்து செயற்பட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், ஆளுங்கட்சியுடனும், அரசுடனும் இணைந்து செயற்பட்டு வந்தார்கள். வரவு – செலவுத் திட்டங்களை ஆதரித்தார்கள். அரசுக்கு பிரச்சினையேற்படும் போதெல்லாம் தனது நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி அரசைப்பாதுகாத்தது கூட்டமைப்பு. ஜெனீவாவிலும் அரசைப் பாதுகாத்துச் செயற்பட்டது.

ஜெனீவாவில் அரசுக்கு ஆதரவான முடிவை எடுக்காமல் விட்டிருந்தால் – அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் சரியாக பேசியிருந்தால் – தமிழர் விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து ஐ.நா பொதுச்சபைக்குக் கொண்டு சென்றிருக்க முடியும். அப்படி செய்திருந்தால், இந்த விவகாரத்தை எப்படி நகர்த்துவதெனப் பார்த்திருக்கலாம்.

ஆனால், அரசு இதைச் செய்யும், அரசுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது, அரசை நம்பவேண்டும், காலஅவகாசம் கொடுக்கவேண்டுமெனச்சொன்னார்கள். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கையெழுத்திட வற்புறுத்தப்பட்டனர். சிவசக்தி ஆனந்தன் தவிர்ந்த மற்றவர்கள் கையெழுத்திட்டனர். இப்படி அரசைப் பாதுகாத்துவந்தவர்கள்தான், சுமந்திரன், சம்பந்தன் போன்றவர்கள்.

அரசமைப்பு கொண்டு வரப்படும், அதுவரை அரசுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது எனச் சொல்லி, நான்கரை வருடங்களாகப் பேச்சு நடந்தது. ஒரு வருடத்தில் முடிகிறது, இரண்டு வருடங்களில் நடக்கிறது என்றார்கள். இப்பொழுது அது குப்பைக்கூடைக்குள் போய்விட்டது. இதைக் கூறி, தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளைக் கைவிட்டனர். அரசியல்கைதிகள், காணிவிடயம் எனப் பல விடயங்கள் கைவிடப்பட்டன.

2000 ஏக்கர் காணி விடுவித்ததாகச் சொல்கிறார்கள். 1500 ஏக்கர் காணி சம்பூரில் விடுவிக்கப்பட்டது. யாழ், வன்னியில் 2,3,4 ஏக்கர் என்றுதான் விடப்பட்டன. பெருமளவு காணிகள் இப்பொழுதும் அரசிடம்தான் உள்ளன.

அரசியல்கைதிகள், காணாமல் போனவர்கள் விடயம், காணி விடுவிப்பு எல்லாவற்றையும் கைவிட்டனர். அரசமைப்பு வந்தால் எல்லாம் சரியாகிவிடுமெனச் சொன்னார்கள். இப்பொழுது அரசமைப்பும் இல்லை, அந்த விவகாரங்களும் நடக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என சொன்னாலும், சித்தார்த்தனுடனோ, செல்வம் அடைக்கலநாதனுடனோ கலந்துரையாடுவதில்லை. தமிழரசுக் கட்சியெனச் சொன்னாலும், மாவை சேனாதிராசாவுடனும் கலந்துரையாடுவதில்லை. சம்பந்தன், சுமந்திரன் மட்டுமே முடிவெடுக்கிறார்கள். இவர்கள் எடுக்கும் முடிவை ஏனையவர்கள் ஏற்க வேண்டும்.

இவர்களின் நடவடிக்கையில் தமிழ் மக்கள் விரக்தி, வெறுப்பு ஏற்பட்டு பல வழிகளில் வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில், 50 வீதத்திற்கும் மேலான வாக்குகள் அவர்களுக்கு விழவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஏற்கனவே தீர்மானத்தை எடுத்திருந்தனர். கடந்த காலத்தில் மக்கள் கொல்லப்படவும், காணாமல் போகவும் காரணமாக இருந்தவர் ஜனாதிபதியாக வரக்கூடாதென உறுதியாக இருந்தார்கள். அந்த மாற்றுத் தெரிவிற்கு வாக்களித்தனர். விக்னேஸ்வரன், நாங்கள் – மக்கள் விரும்பியவர்களுக்கு வாக்களியுங்கள் எனக்கூறினோம். ஏனெனில், மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பது எமக்குத் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித்தை ஆதரிக்கும் முடிவெடுத்து, தீவிர பிரசாரம் செய்து கோட்டாபய வெற்றியடைய காரணமாக சம்பந்தனும், சுமந்திரனும் மாறினார்கள்.

கடந்த நான்கரை வருட செயற்பாட்டில் நாம் தோல்வியடைந்து விட்டோம் என்பதைச் சுமந்திரன் தரப்பு புரிந்து கொள்ளவேண்டும். அரசமைப்பு உருவாக்கம் மற்றும் யுத்தத்தின் பின்னர் தமிழர்களின் பிரச்சினையைக் கையாள்வதில் தோல்வியடைந்து விட்டோம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தாம்விட்ட தவறுகளைப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் ஐக்கியத்தைப் பற்றிப் பேசுவது, மக்களை ஏமாற்றி வாக்கை எடுப்பதற்கே.

அரசமைப்பு உருவானவுடன் எனது பணி முடிந்துவிடும், நாடாளுமன்றத்தில் அரசியல்வாதியாக இருக்க முனையமாட்டேன், அவ்வாறு வராத பட்சத்தில் அதற்கான பொறுப்பை ஏற்று விலகிவிடுவேன் என்றார். அவர் தன்னையொரு 'ஜென்டில்மனாக' கருதுபவர், சொல்பவர். அரசமைப்பு வரவில்லை. அதன் மூலகர்த்தாவாக இவர்தான் இருந்தார். நான்கரை வருடங்களாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்தக் கொண்டு, அரசமைப்பை கொண்டு வர முடியாமல் இருந்தார்கள்.

எதிர்க்கட்சியில் இருந்தாலும், அரசுடன் இணைந்து செயற்பட்டனர். வடக்கு – கிழக்கில் அரச முக்கியஸ்தர்களாக அவர்கள் தான் இருந்தார்கள். இப்படியிருந்தும், இவர்களால் எதையும் செய்ய முடியவில்லை.

வரப்போகும் தேர்தலில் பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுமெனச் சொல்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் விகிதாசார முறைப்படி நடக்கும். அதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்பதெல்லாம் தெரியாது. ஜனாதிபதி தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது பெரமுன மீண்டும் ஆட்சிக்கு வருமெனத் தெரிகிறது.

முதல் சொன்னார்கள், கோட்டாபயவை தோற்கடிக்க வாக்களிக்கும்படி கேட்டார்கள். கோட்டா வென்று விட்டார். இப்போது, மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கக்கூடாது. நாங்கள் ஒன்று சேர வேண்டுமென்கிறார்கள்.

மாற்று அணி வரக்கூடாது, பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்க விடக்கூடாது எனச் சொல்லத் தேவையில்லை. அதை மக்கள் தீர்மானிக்கும் காலம் வந்துள்ளது. மாற்று அணி தேவையில்லை, மூன்றில் இரண்டு பெரும்பான்மை வரவிடக்கூடாது எனச் சுமந்திரன் சொல்லத் தேவையில்லை. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலிலும் சிங்கள மக்களின் வாக்கிலேயே அவர்கள் வெற்றி பெற்றார்கள். அவர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொடுக்க வேண்டுமென சிங்கள மக்கள் முடிவெடுத்தால், அது நடக்கலாம்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அவர்கள் வெற்றி பெற்றால், அதைப் பயன்படுத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்க ஏன் முயற்சிக்கக்கூடாது என்பது அடுத்த கேள்வி. ஏற்கனவே ஐ.தே.கவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தும் உங்களால் தீர்க்க முடியவில்லை. இப்பொழுது இவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தால், நாம் சிறிய தேசிய இனமொன்ற அடிப்படையில் அவர்களுடன் பேசி தீர்விற்கு வரமுடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தால், 19ஆவது திருத்தச்சட்டத்தைச் சிலசமயம் அவர்கள் மாற்றலாம். அதை மாற்றினால் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு போன்ற உறுதிப்படுத்தப்பட்ட சில விடயங்கள் மாற்றப்படலாம். பலமுறை ஒருவர் ஜனாதிபதியாகலாம். 19ஆவது திருத்தத்தினால் பாதிக்கப்படபோவது பெரும்பான்மையான சிங்கள மக்களே. தமிழ் மக்கள் ஏற்கனவே பலவிதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தம்மைத்தாமே நிர்வகிக்க, தமது பாதுகாப்பை பலப்படுத்த எப்படியான உபாயங்களை வகுப்பதென நாங்கள் தீர்மானிக்க வேண்டுமே தவிர, சுமந்திரன் அல்லர் – என்றார். (ஐ-07)

## சுவிஸ் தூதரக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொழும்பில் சுவிஸ் தூதரகத்தில் விசா பிரிவில் வேலை செய்கின்ற பெண் கடத்தப்பட்டிருக்கின்றார். அவர் இலங்கையைச் சேர்ந்தவர். அவர் அங்கு ஒரு அதிகாரியாகப் பணியாற்றுகிறார். அவர் கடத்தப்பட்டு அவரிடம் பல தகவல்களைப் பெற கடத்தல்காரர்கள் முயற்சித்திருக்கிறார்கள் என்று ஊடகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் சுவிஸ் தூதுவர் உடனடியாகப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து கண்டனங்களை வெளியிட்டமையுடன் உடனடியாக இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய முன்னர் பாதுகாப்புச் செயலராக இருந்த போது அவர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்தன. கடந்த காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளை ஐக்கிய தேசியக் கட்சியும் முன்வைத்தது. வெள்ளை வான் கடத்தல்கள், காணாமல்போனவர்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்குக் காரணமாக இருந்தார் என்று அவர் மீது பல பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இப்போது புதிய ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டு சில நாள்களுக்குள் இவ்வாறான விடயம் நடந்துள்ளமை சர்வதேசத்தின் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதுடன் இவர்கள் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகிறார்களா என்ற கேள்வியையும் அது எழுப்பும்.

இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் ராஜதந்திர மட்டத்தில் வேலை செய்யக் கூடியவர்கள் கடத்தப்படுவது என்பது சர்வதேசம் அதனைச் சரியான கோணத்தில் பார்க்க மாட்டாது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். ஆகவே இதனை யார் செய்தார்கள், ஏன் செய்தார்கள் என்பன போன்ற விடயங்கள் உடனடியாக விசாரிக்கப்பட்டு உண்மை நிலைமைகள் சர்வதேசத்தின் முன் கொண்டு வரப்பட வேண்டும் – என்றார். (ஐ-07)

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கை விவகாரம் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் புதிய அணுகுமுறைக்கான முயற்சிகளில் இலங்கையின் புதிய ஜனாதிபதியும் அவரது அரசும் ஈடுபடுவதில் அர்த்தமோ, பிரயோசனமோ இருக்கப் போவதில்லை. ஏனெனில் இலங்கை தொடர்பாக அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு இலங்கையே அனுசரணைப் பணி வகித்து வழி செய்துள்ளது.

"அந்தத் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியமை மூலம் தான் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள் இருந்து இலங்கை பின்வாங்கக் கூடாது. அப்படிப் பின்வாங்குமானால் அது விரைவில் சர்வதேச மட்டத்தில் தனது சட்ட பூர்வதன்மையை விரைவில் இழக்கும். தோற்ற நாடாக அது கருதப்படும்.

"யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் காணாமலாக்கப்பட்டோருக்கு உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் அவர்களின் உறவுகளுக்கு நீதி, நியாயமான பதில் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அதற்காக இந்த விடயம் விசாரிக்கப்படுவது கட்டாயமாகும்" – என்றார் சம்பந்தன்.

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்தும் பேச்சுக்கான அழைப்பைத் தாங்கள் எதிர்பார்த்துக்காத்திருக்கின்றனர் என்றும் சம்பந்தன் கூறினார்.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் புதிதாகத் தங்கள் கருத்துக்களை முன்வைப்பது என இலங்கையின் புதிய அரசாங்கத்தின் முதல் அமைச்சரவை ஓரிரு தினங்களுக்கு முன்னர் தீர்மானித்திருந்தது.

2015 இல் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் "இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்துதல்" – என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட 30/1 இலக்கத் தீர்மானம், நாட்டின் அமைச்சரவை, நாடாளுமன்றம், சட்டமா அதிபர் ஆகிய தரப்புகளின் உத்தியோகபூர்வ ஆலோசனையின்றி அப்போதைய வெளிவிவகார அமச்சர் மங்கள சமரவீரவினால் தன்பாட்டில் முன்வைக்கப்பட்டது எனக் குறிப்பிடும் இலங்கை அதனால் அந்தத் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று கோருகின்றது. (உ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைகேடு குற்றச்சாட்டுக்கள், முன்னாள் அமைச்சர்கள் சிலர் மீது சுமத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படலாமெனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.தே.கவின் மூத்த பிரமுகர்கள் மற்றும் அதன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சிலரே விரைவில் விசாரணையைச் சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணைகள், பழிவாங்கல் நடவடிக்கையென்ற விமர்சனம் எழும்பக் காரணமாக அமைந்து விடலாமென்ற விடயத்திலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

எனினும், இது பழிவாங்கல் நடவடிக்கையல்ல, முன்னாள் அமைச்சர்களின் நிதி முறைகேடு விவரங்களை அரசு பெற்றுள்ளது என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவும் இந்தச் செய்தியை உறுதிப்படுத்தினார். இந்த வழக்குகள் சட்டமா அதிபர் ஊடாக கையாளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வழக்கிலும் சட்டம் பின்பற்றப்படும். சி.ஐ.டி. தேவையான விசாரணைகளை மேற்கொள்ளும். சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆலோசிக்கப்படும் என்று அமைச்சர் ரம்புக்வெல்ல கூறினார். (ஐ)

## முக்கிய வழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான ஆணையைப் பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன நேற்று வெளியிட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியும் அதற்காகப் பெறப்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

ரத்துபஸ்வல பகுதியில் தண்ணீர் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை, லசந்த விக்கிரமதுங்க கொலை, ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தல், ரிவிர பத்திரிகை ஆசிரியர் கடத்தி தாக்கப்பட்ட விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான விசாரணைகளும் இவராலேயே முன்னெடுக்கப்பட்டுவந்தன. ரதுபஸ்வல சம்பவம் தொடர்பாக நான்கு இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இந்தியத் தரப்பு வலியுறுத்தும் அரசமைப்பின் 13 ஆம் திருத்தம்

இரண்டு நாள் புதுடில்லி விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பு திரும்பி விட்டார்.

அங்கு தெளிவான செய்தி ஒன்றை இந்தியப் பிரதமர் மோடி, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோர் இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கியிருப்பார்கள் என்பது திண்ணம்.

அதுவும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விடயம் தொடர்பில் இந்தியாவின் அணுகுமுறை, எதிர்பார்ப்பு யாவை என்பதை புதிய ஜனாதிபதிக்கு இந்தியத் தரப்பு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துரைத்திருக்கும்.

அதுவும் இலங்கை ஜனாதிபதியின் புதுடில்லி விஜயத்தை ஒட்டி இந்தியப் பிரதமர் மோடி வெளியிட்ட பத்திரிகையாளர்களுக்கான உரையில் இந்த விடயம் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றது.

**"இலங்கையில் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவை குறித்த அபிலாஷைகளை நிறைவேற்றும் நல்லிணக்க முறையொன்று முன்னெடுக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த நல்லிணக்கச் செயற்பாட்டில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும் உள்ளடங்கும்."** – என்று மோடி சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய நிலையில் – 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற கந்தறு நிலையில் – அவர்கள் இருக்கையில், பிரதமர் மோடியின் இந்த அறிவிப்பு ஒரு சிறிய உரமூட்டல் மட்டுமே.

பிரதமர் மோடியின் அறிவிப்பு மிகத் தெளிவானது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பதுதான் அவரது நிலைப்பாடு.

சில ஊடகங்கள், அந்த அறிவிப்பை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தையும் தாண்டி நடைமுறைப்படுத்த அவர் வலியுறுத்துகின்றார் என அர்த்தப்படுத்தி செய்தி வெளியிட்டாலும் அது அப்படியில்லை. 13ஆவது திருத்த நடைமுறையாக்கமே அவர் வலியுறுத்துவது.

அது, தமிழர்களின் நீதி, நியாயமான எதிர்பார்ப்பை – அபிலாஷைகளை – வேணவாவை – விருப்பை – நிறைவு செய்யுமா என்று கேட்டால் நிச்சயம் இல்லை என்பதுதான் ஒரே பதில்.

இந்தியப் பிரதமர் மோடியின் வலியுறுத்தல் இலங்கைத் தமிழரின் அரசியல் தீர்வு விடயத்தில் புதிய நம்பிக்கையைத் தந்திருப்பதாகக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. குறிப்பிட்டிருந்தாலும் கூட, அது அவரது அடிமனத்திலிருந்து வந்த திருப்தியாக அர்த்தப்படுத்தக் கூடியதல்ல என்பதும் மிகவும் தெளிவானது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கம் குறித்தே மோடி வலியுறுத்துகின்றார்.

அதை வரவேற்பதாக – அல்லது அது திருப்தி தருவதாக – சுமந்திரனின் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தாலும் அவர், **"13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வைத் தர இருப்பதாக முன்னைய காலங்களில் ராஜபக்ஷ ஆட்சியின்போது குறிப்பிடப்பட்டது. அந்த வாக்குறுதியையும் அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என நாம் விரும்புகின்றோம்."** – என்று தொடர்ந்து கூறுகின்றமையையும் நாம் நோக்க வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தையும் கடந்து தமிழர் தரப்பு வந்து பல வருடங்களாகி விட்டன.

எனினும், அதைக் கூடத் தமிழருக்கு வழங்க முடியாத – அவர்களுக்கு நீதி செய்ய இயலாத – பேரினவாத மேலாதிக்கச் சிந்தையில் சிங்கள, பௌத்தம் சந்நதம் கொண்டு நிற்கையில், 13 ஆவது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா வலியுறுத்துகின்றது என்பது தமிழருக்கு ஆதரவான செய்திதான்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கொண்டு வரப்பட்ட சட்ட ரீதியான அதிகாரப் பரவலாக்கல் பல, நடைமுறைப்படுத்தப்படாமலேயே கைவிடப்பட்டு விட்டன.

பல விடயங்கள் பின்னர் கொண்டு வரப்பட்ட அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் பறிக்கப்பட்டு விட்டன அல்லது மூலத் திருத்தத்தில் நீர்த்துப் போகச் செய்யப்பட்டு விட்டன.

எஞ்சி, சட்டப் புத்தகத்தில் இருப்பது உப்புச் சப்பற்ற அதிகாரப் பரவலாக்கல் விவகாரங்களே.

அவற்றைக் கூட நடைமுறைப்படுத்த ராஜபக்ஷக்கள் இணங்கப் போவதில்லை என்பது வெளிப்படையானது.

பிரதமர் மோடி தமது உரையில் குறிப்பிட்ட இந்த விடயங்களுக்கு இலங்கை ஜனாதிபதி தமது உரையில் பதில் தராதமை மட்டுமல்லாமல் அந்த விடயத்தைத் தொடக் கூட இல்லை.

இந்த விவகாரத்தில் புதிய அரசுத் தலைவரின் நிலைப்பாடு எத்தகையது என்பதற்கு அவரது பதிலுரை நல்ல உரைகல்.

# கோட்டாபயவின் புகைப்படத்தை அவருக்கே பரிசளித்தார் மோடி



புதுடில்லி, டிசெ. 01

இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் இந்தியப் பிரதமரை சந்தித்தபோது மோடி வழங்கிய பரிசான புகைப்படம் கோட்டாபயவைப் பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

கோட்டாபய இராணுவத்தில் பணியாற்றிய போது பயிற்சிநெறி ஒன்றுக்காக இந்திய பாதுகாப்புப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றிருந்த சமயம் எடுக்கப்பட்ட படத்தையே மோடி பரிசாக வழங்கியிருந்தார்.

அப்போது கோட்டாவுடன் பயிற்சி பெற்ற அணியில் இப்போதைய இந்திய அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் வி.கே .சிங்கும் இருந்தார் . தற்போதைய நைஜீரிய ஜனாதிபதியும் இந்த புகைப்படத்தில் உள்ளார் என அறியமுடிந்தது.

"மிஸ்டர் ப்ரெசிடெண்ட் உங்களிடம் இல்லாத ஒரு அரிய புகைப்படம் இது" - என்று கூறியபடி இந்த புகைப்படத்தை மோடி வழங்கியபோது அதனை பார்த்து வியந்த கோட்டாபய, இந்திய பிரதமருக்கு தனது நன்றியை தெரிவித்தார். (ஐ)

# சாதாரண தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 01

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனைத்தும் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பெயர், பாடவிதானங்கள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின், 1911 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

பரீட்சையில் மோசடிகளை தவிர்ப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன எனவும், இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய மாணவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

# கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய பொருள்களை பகிரங்க ஏலத்தில் விடுகிறது யாழ்.மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 01

போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடிப் படக்குகள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் உள்ளிட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான சான்றுப் பொருள்கள் அரசுடமையாக்கப்பட்ட நிலையில் அவற்றைப் பகிரங்க ஏல விற்பனையில் விற்றுத் தீர்க்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் உத்தரவிட்டுள்ளார்.

மன்றின் கட்டளைப் படி சான்றுப் பொருள்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாக முன்றிலில் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் மீரா வடிவேற்கரசன் அறிவித்துள்ளார்.

அத்துடன், இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளுக்குள் இடம்பெற்ற போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு நடவடிக்கைகளின் போது, கைப்பற்றப்பட்ட கஞ்சா, ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்கள் தொடர்பான வழக்குகள் நிறைவடைந்துள்ளன. சம்பவங்களில் கைது செய்யப்பட்டோருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த வழக்குகளுடன் தொடர்புடைய சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான ஆயிரம் கிலோ கிராம் கேரளக் கஞ்சாவும் சுமார் 8 கோடி ரூபா பெறுமதியான 8 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் தீயிட்டு அழிக்கப்பட்டன.

இந்த நிலையில் இந்த வழக்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட 4 மீன்பிடிப் படகுகள், அவற்றுக்கான 4 வெளியிணைப்பு இயந்திரங்கள், 3 மோட்டார் சைக்கிள்கள், 15 சைக்கிள்கள், எரிபொருள் நிரப்பப் பயன்படுத்தப்பட்ட வெற்று பிளாஸ்ரிக் கான்கள், ஜீ.பி.எஸ். கருவி, நங்கூரம், பைப்புகள் உள்ளிட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான சான்றுப் பொருள்களை அரசுடமையாக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தச் சான்றுப்பொருள்கள் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாக முன்றலில் வைத்துப் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(காரத்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
சமாதானம், சமத்துவம், சமவாய்ப்பு, சம உழைப்பு,
சம கூலி, சம அந்தஸ்து, சமூகப் பொருளாதாரம்
சாத்தியமாக்கிட சாதனை படைப்பீர்
சமகாலப் பெண்கள்
JSAC
16
2019

நாளை
02.12.2019
திங்கட்கிழமை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப 1.59 வரை
திதி : ஷஷ்டி மு.இ 10.47 வரை
இராகுகாலம் : 7.45 – 9.15
சுப நேரம் : 12.15 – 1.45

# எனது அரசியல் வாழ்வு இன்னும் முடியவில்லை

## பொலனறுவையில் கூறினார் மைத்திரி



கொழும்பு, டிசெ. 01

தனது அரசியல் வாழ்க்கை இன்னும் முடிவடையவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியாக இல்லாதமையால் எனது அரசியல் வாழ்க்கையும் முடிந்துவிட்டதாகச் சிலர் கருதுகின்றனர்.

அரசியலுக்கு மீண்டும் வருவேன் என்று நம்புகிறேன். என்னால் முடியும் வரை அரசியலில் தொடருவேன்.

என் இறுதி மூச்சைச் சுவாசிக்கும் வரை நாட்டுக்கும் மக்களுக்கும் தொடர்ந்து சேவை செய்வேன். அதனை யாரும் தடுக்க முடியாது – என்றார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்த லில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் மைத்திரி நாடாளுமன்றத்தில் நுழைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# மண்டைதீவுச் சந்திக் காவலரணில் பொலிஸார் ஒருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 01

மண்டைதீவுச் சந்திப் பொலிஸ் காவலரனில் நேற்று முன் தினம் இரவு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தரின் உயிரிழப்பு தொடர்பில் பல்வேறு பட்ட சந்தேகங்கள் எழும்நிலையில் அவர் மாரடைப்பால் உயிரிழுந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அநுராதபுரத்தைச் சேர்ந்த 40 வயதுடைய காமினி என்ற உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மண்டைதீவுச் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரனுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இரவு நேரக் கடமைக்காகப் பொலிஸ் உத்தியோகத்தர் சென்றிருந்தார். அவர் அங்கு நள்ளிரவு உறக்கத்துக்குச் சென்றுள்ளார்.

எனினும் நேற்று சனிக்கிழமை காலை அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மைத்திரிக்கு பெரு வரவேற்பு!

கொழும்பு, டிசெ. 01

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தனது சொந்த ஊரான பொலனறுவைக்குச் சென்றார். அங்கு அவருக்கு பெரும் கௌரவிப்பு நிகழ்வு நடந்தது.

அமைச்சர் தயாசிறி ஜயசேகரவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். (ஐ)





# யாழ்.பல்கலை துணைவேந்தர் பதவி விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்காக மூவர் அடங்கிய குழு நியமனம்!

யாழ்ப்பாணம், டிசெ. 01

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரைப் பரிந்துரை செய்வதற்கான தேர்தலை நடத்துவதற்குரிய முன்னாயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக மூவரடங்கிய மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளவர்களின் தகுதி, தராதரங்களை மதிப்பிடுவதற்கும், தேர்தல் தினத்தைத் தீர்மானிப்பதற்குமான குழுவைத் தெரிவு செய்வதற்காக யாழ். பல்கலைக்கழக பேரவை நேற்று கூடியது.

யாழ். பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து தேர்தலை நடத்துவதற்கு வசதியான திகதியைப் பேரவைக்கு அறிவிப்பதற்காக யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறைப் பேராசிரியர். பு. ரவிராஜன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வாழ் நாள் பேராசிரியர் கலாநிதி சி. சிவலோகநாதன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஜவ்பர் சாதிக் ஆகிய மூன்று பேரவை உறுப்பினர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட் டிருக்கிறது.

நியமிக்கப்பட்ட குழுவின் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும், குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்தல் திகதி பேரவையினால் தீர்மானிக்கப்படும். தேர்தல் தினத்தன்று தேர்தலைக் கண்காணிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஒருவர் பார்வையாளராகக் கலந்து கொள் வார்.

அடுத்து வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் – இயலுமான அளவு விரைவாக துணைவேந்தர் பதவிக்கான தேர்தலை நடத்துவதென நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவைக்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்டு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய இதுவரை காலமும் பேரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ளாத புதிய உறுப்பினர் கு. சிவராம் நேற்றைய கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்.

## அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு!

கொழும்பு, டிசெ. 01

எதிர்வரும் 4 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்துரையாடலுக்கு வருமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# பரீட்சை மண்டபத்துக்குள் கொப்பியடிப்பதைத் தடுத்த மேற்பார்வையாளர்களை நையப்புடைத்த மாணவர்கள்!

அம்பாறை, டிசெ. 01

அம்பாறை, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்றுமுன் தினம் பரீட்சையின்போது தாம் மறைத்து வைத்திருந்த சிறு குறிப்புகள் எழுதப்பட்ட துண்டுகளைப் பார்த்து எழுதுவதற்கு அனுமதிக்காத பரீட்சை மேற்பார்வையாளர்கள் மீது, மாணவர்களும், அவர்களுடன் வந்த குழுவினரும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் காயமடைந்த மேற்பார்வையாளர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் கடந்த 25 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. மொத்தமாக 218 மாணவர்கள் தத்தமது பிரிவுகளுக்கான பரீட்சைகளை எழுதும் நிலையில், அங்கு 12 பரீட்சைக் கண்காணிப்பாளர்கள் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் வேறு கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்கள் ஆவர்.

இந்த நிலையில், காலை 9 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக, சில மாணவர்கள் மறைத்து வைத்திருந்த சிறுகுறிப்பு துண்டுகளைப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் கைப்பற்றியிருந்தனர். ஆயினும், பரீட்சை நடந்து கொண்டிருந்த போது மாணவர் ஒருவர் மறைத்து வைத்திருந்த காகிதத் துண்டுகளை வெளியில் வைத்துக் கொண்டு, கேள்விகளுக்கான பதில்களை எழுதிக் கொண்டிருந்தார் எனவும், தாங்கள் அந்த மாணவர் முறைகேடு செய்வதைக் கண்டுபிடித்தனர் எனவும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதனை அடுத்து, அந்த மாணவரைத் தொடர்ந்தும் பரீட்சை எழுத அனுமதிக்காத மேற்பார்வையாளர்கள், அவரை மண்டபத்திலிருந்து வெளியேற்றினர். இதனை அடுத்து, நண்பகல் 12 மணியளவில் தம்மிடம் வந்து மேற்படி மாணவர் சச்சரவில் ஈடுபட்டார் எனவும், பின்னர் அங்கு வந்த சுமார் 30 பேரைக் கொண்ட குழுவினர் தம்மீது தாக்குதல் நடத்தினர் எனவும் பாதிக்கப்பட்ட பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவரும், உதவி மேற்பார்வையாளர் இருவரும் காயமடைந்த நிலையில், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எங்கள் மீது அவர்கள் தடிகள் கொண்டு தாக்கினர். நாங்கள் தடுத்த போது, தொடர்ந்தும் அவர்கள் தாக்கினார்கள். அவர்களில் சிலர் தலைக்கவசம் அணிந்து தமது முகத்தை மறைத்திருந்தனர், என்று, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உதவி மேற்பார்வையாளர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தமது திணைக்களத்தின் அனுமதியின்றித் தங்கள் பெயர் மற்றும் படங்களை ஊடகங்களில் வெளியிட வேண்டாம் என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுக் கொண்டனர்.

தாக்குதலுக்கு உள்ளான அதிகாரிகள் இருவரின் தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பரீட்சை மேற்பார்வையாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எம்.எம். ஹசன், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை அடுத்து, பாதிக்கப்பட்டவர்களிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், பரீட்சைக் கடமையில் ஈடுபடுவதற்கு மேற்பார்வையாளர்கள் தயக்கம் காட்டி வருவதாகவும், திங்கட்கிழமை நடைபெறுவதற்கு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள பரீட்சையை நடத்துவது குறித்து தாம் கலந்தாலோசித்து வருகிறார் என்றும், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ஹசன் தெரிவித்தார். (ஐ)

# நீண்ட வரிசையில் காத்திருந்து வெங்காயம் வாங்கும் மக்கள்





பீகாரில் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் வெங்காயம் குறைந்த விலைக்கு விற்கப்பட்டதால், அதை வாங்க மக்கள் கூட்டம் அலைமோதியது.

விளைச்சல் பாதிப்பு, வரத்து குறைவு போன்ற காரணத்தினால் இந்தியாவில் வெங்காயத்தின் விலை கிலோ 100 ரூபாயை தொட்டுள்ளது.

இந்த நிலையில் பீகாரில் கூட்டுறவுச் சங்கம் மூலம் கிலோ 35 ரூபாய்க்கு நபர் ஒருவருக்கு 2 கிலோ வெங்காயம் வெள்ளிக்கிழமை முதல் விற்கப்படும் என மாநில அரசு அறிவித்திருந்தது.

# உள்ளாட்சித் தேர்தலுக்கு நாங்கள்தான் தடையா?

## பொய்க் குற்றச்சாட்டு என்கிறார் ஸ்டாலின்



சென்னை, டிசெ. 01

உள்ளாட்சித் தேர்தலை நிறுத்தும் முயற்சியில், நாங்கள் ஈடுபடுவதாக, முதல்வர் முதல், கடைக்குட்டி அமைச்சர் வரை, பொய்க் குற்றச்சாட்டு சுமத்துகின்றனர் என தி.மு.க., தலைவர் ஸ்டாலின் கூறினார்.

சென்னை அறிவாலயத்தில் அவர் அளித்த பேட்டியில்– உள்ளாட்சிதேர்தலை, அ.தி.மு.க., அரசு, தொடர்ந்து, மூன்று ஆண்டுகள் நடத்தாமல், ஏதாவது சில காரணங்களை சொல்லி வருகிறது. யாராவது நீதிமன்றத்திற்கு சென்று, தடை பெறுவரா? தடை பெற்று, எப்படியாவது நிறுத்தி விட வேண்டும் என்கிற, ஒரே நோக்கத்தோடு, அ.தி.மு.க., அரசு செயல்படுகிறது.

தி.மு.க., தான், நீதிமன்றத்திற்கு சென்று, உள்ளாட்சித் தேர்தலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறது என திட்டமிட்டு முதல்வர் முதல், கடைக்குட்டி அமைச்சர் வரை பொய்க் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, வார்டு வரையறை பணியை, அரசு இதுவரை செய்யவில்லை; புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு, வார்டு மறுவரையறை பணிகளையும், வார்டு வரையறை பணிகளையும், இதுவரை செய்யவில்லை. பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியின் பட்டியலின, பழங்குடியின மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீட்டை, அ.தி.மு.க., அரசு, இன்னும், செய்யவில்லை.

அதேபோல, மாவட்ட ஊராட்சிக்கான ஒதுக்கீட்டையும், இதுவரை, அ.தி.மு.க., அரசு செய்ய வில்லை. மறைமுக தேர்தல் என்ற சூழ்நிலையை உருவாக்கி உள்ளனர். இப்படி பல குழப்பங்களை செய்து, அதன் வாயிலாக, யாராவது நீதிமன்றத்திற்கு சென்று, தேர்தலை நிறுத்தி விடலாம் என்கிற எண்ணத்தில் தான், இ.பி.எஸ்., அரசு செயல்படுகிறது – என்றார். (ஐ)

# டெல்லி அருகே மிகப்பெரிய விமான நிலையம் ஒப்பந்ததை பெற்றது சுவிட்ஸர்லாந்து நிறுவனம்



டெல்லி அருகே அமைய உள்ள இந்தியாவின் மிகப்பெரிய விமான நிலையத்தை கட்டுவதற்கான ஒப்பந்தத்தை, சுவிட்ஸர்லாந்து நிறுவனம் பெற்றுள்ளது.

ஜீவார் விமான நிலையம் என்று குறிப்பிடப்படும், நொய்டா சர்வதேச கிரீன்ஃபீல்டு விமான நிலையம், 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், 29 ஆயிரத்து 560 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) செலவில் கட்டப்பட உள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தைப் பெற அதானி, டயல் எனப்படும் டெல்லி இன்டர்நேஷனல் ஏர்போர்ட் போன்ற நிறுவனங்கள் போட்டியிட்டன. ஆனால் அவற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளி, சுவிட்ஸர்லாந்தை சேர்ந்த ஜூரிச் ஏர்போர்ட் இன்டர்நேசனல் என்ற நிறுவனம் ஒப்பந்தத்தை பெற்றுள்ளது.

டெல்லி தலைநகர் மண்டலத்தில் ஏற்கெனவே இந்திராகாந்தி, ஹிண்டன் ஆகிய இரு விமான நிலையங்கள் உள்ளன. டெல்லி தலைநகர் மண்டலத்தில் மூன்றாவதாக வரும் ஜீவார் விமான நிலையம், உத்தரப்பிரதேசத்தின் கௌதம் புத்தா மாவட்டத்தில் அமைகிறது. இதற்கு சர்வதேச அளவில் கடந்த மே 30ஆம் திகதி ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டன. இது தொடர்பான பல்வேறு நடைமுறைகளுக்குப் பிறகு, சிறந்த ஒப்பந்தப் புள்ளி அளித்த ஜூரிச் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் முதல் கட்டம் 1334 ஹெக்டேரில், 4 ஆயிரத்து 588 கோடி ரூபாய் செலவில் 2023ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட உள்ளது. முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட பின்னர் இந்த விமான நிலையத்தில் 6 முதல் 8 ஓடுதளங்கள் இருக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கலிபோர்னியாவில் இந்திய மாணவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தில் மைசூரை சேர்ந்த 25 வயதான மாணவர் அபிகே சுதேஷ் பட் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கலிபோர்னியா அரசுப் பல்கலைக் கழகத்தில் கம்பியூட்டர் விஞ்ஞானம் படித்து வந்த அவர் பணத்தேவைக்காக அங்குள்ள உணவுவிடுதியில் பகுதி நேர வேலை பார்த்து வந்தார். பணி முடித்து வீடு திரும்பும்போது அடையாளம் தெரியாத நபரால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



கண்காணிப்பு கமராவில் பதிவாகி உள்ள காட்சிகளை வைத்து குற்றவாளியைத் தேடி வருகின்றனர். அபிகேகின் உடல் கலிபோர்னியாவின் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

மைசூரில் உள்ள குவெம்புநகரில் வசித்து வரும் அபிகேகின் பெற்றோருக்கு இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ஜ.கவில் இணைந்த ராதாரவி



சென்னை,டிசெ.01

நடிகர் ராதாரவி நேற்று பாரதீய ஜனதாக் கட்சியில் இணைந்தார். கட்சியின் செயல் தலைவர் ஜே.பி.நட்டா முன்னிலையில் அவர் பா.ஜ.கவில் இணைந்துள்ளார்.

தி.மு.கவில் இருந்த நடிகர் ராதாரவி, நடிகை நயன்தாரா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்தார். இதற்கு கண்டனங்கள் எழுந்த நிலையில், தி.மு.கவில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டார்.

இதனால் கடும் அதிருப்தியில் இருந்த ராதாரவி, கடந்த ஜூன் மாதம் அ.தி.மு.கவில் இணைந்தார். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து அ.தி.மு.கவில் தன்னை இணைத்துக்கொண்டார்.

இப்போது அவர் பா.ஜ.க. பக்கம் பாய்ந்துள்ளார்.

# தலைமுடியை வெட்டிய இளம் நடிகருக்கு ரூ.7 கோடி அபராதம்





இஷ்க், கும்பளங்கி நைட்ஸ் உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமான இளம் நடிகர் ஷேன் நிகமிற்கு தலைமுடியை வெட்டியதற்காக ரூ.7 கோடி (இந்தியப் பணத்தில்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நடிகர்,நடிகைகள் கதாபாத்திரங்களுக்காக தோற்றத்தை மாற்றுவது வழக்கம். இஷ்க், கும்பளங்கி நைட்ஸ் உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமான மலையாள இளம் கதாநாயகன் ஷேன் நிகமை, வெயில் என்ற பெயரில் தயாராகும் மலையாள படத்தில் ஒப்பந்தம் செய்து கதாபாத்திரத்துக்காக தலைமுடியை நீளமாக வளர்க்கும்படி இயக்குநர் அறிவுறுத்தினார்.

படப்பிடிப்பு முடியும் வரை முடியை வெட்டக்கூடாது என்றும் கூறி இருந்தார். தலைமுடி நீளமாக வளர்ந்த பிறகு படப்பிடிப்பை தொடங்கி நடத்தி வந்தனர்.

இடையில் குர்பானி என்ற படத்தில் நடிக்கவும் ஷேன் நிகமை ஒப்பந்தம் செய்தனர். வெயில் படப்பிடிப்பு முடியாத நிலையில் குர்பானி படத்தில் நடிக்க தலைமுடியை வெட்டி விட்டார். புதிய தோற்றத்தில் இருக்கும் புகைப்படத்தையும் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார்.

ஷேன் நிகம் மீது படத்தின் இயக்குனர் சரத் மற்றும் தயாரிப்பாளர் ஜோபி ஜார்ஜ் ஆகியோர் மலையாள நடிகர் சங்கத்திலும், தயாரிப்பாளர் சங்கத்திலும் புகார் அளித்தனர்.

இந்த பிரச்சினை குறித்து ஆலோசிக்க மலையாள தயாரிப்பாளர் சங்கத்தின் அவசர ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு பின் நிருபர்களுக்கு பேட்டி அளித்த நிர்வாகிகள் ஷேன் நிகம் நடிக்கும் படங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க மாட்டோம். அவர் நடித்துவரும் வெயில், குர்பானி படங்கள் கைவிடப்படுகின்றன. அந்த படங்களுக்கு செலவழித்த ரூ.7 கோடியை ஷேன் நிகம் திரும்ப தர வேண்டும் என்று கூறினர்.

காலைக்கதிர் Kalaikathir



# லண்டன் பாலத்தில் கத்திக் குத்துத் தாக்குதல் இரு சிவிலியன்கள் சாவு; மேலும் பலர் காயம்



லண்டன்,டிசெ.01

இங்கிலாந்தின் லண்டன் பாலத்தில் சென்ற மக்கள் மீது நடத்தப்பட்ட கத்திக்குத்துத் தாக்குதல் அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள பிரசித்தி பெற்ற லண்டன் பாலத்தில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகலில் மர்ம நபர் ஒருவர் திடீரெனத் தாக்குதல் நடத்தினார். சரமாரியாக அவர் கத்தியால் குத்தியமையில் இருவர் உயிரிழந்தனர். மர்ம நபர் கத்தியால் தாக்கியதில் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதையடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்திய மர்ம நபரை பாலத்தின் அருகே துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.

இதனைப் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவமாகக் கருதி விசாரித்து வருவதாக ஸ்கொட்லண்ட் யார்டு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன், லண்டன் பாலம் அருகே மூன்று பேர், கத்தியால் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்த சம்பவத்தை மேற்படி தாக்குதல் சம்பவம் நினைவு படுத்தியது.

இந்தத் தாக்குதலையடுத்து, லண்டன் மேம் பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் அது கொண்டு வரப்பட்டது.

இங்கிலாந்தில் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில், இந்தத் தாக்குதல் நடைபெற்றிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியது.

இங்கிலாந்து பிரதமர் தனது தொகுதி பயணத்தை ரத்து செய்து விட்டு, உடனடியாக லண்டன் திரும்பினார். இங்கிலாந்தின் அவசரக் குழுவுடன் அவர் ஆலோசனை நடத்தினார். அஞ்சம் சௌத்திரி என்பவர் தலைமையில் இயங்கும் அல் – முஹஜிரோன் என்ற அமைப்பைச் சேர்ந்த – முன்னர் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்ட – ஒருவரே இத்தாகுதலை நடத்தினார் எனக் கூறப்படுகிறது.





கத்தியால் சிவிலியன்களைக் குத்திய அந்த நபர் தான் குண்டுகள் பொருத்தப்பட்ட ஜாக்கெட் அணிந்திருக்கிறார் என எச்சரிக்கை விடுத்தமையை அடுத்து தூர இருந்தவாறே அவரைப் பொலிஸார் சுட்டுக்கொன்றனர். ஆனால் அவரது ஜாக்கெட்டில் குண்டு ஏதும் இருக்கவில்லை என்பது பின்னர் தெரிய வந்தது.

# கனடா டொரன்டோவில் விமான விபத்து; 7 பேர் பலி



ஒட்டாவா,டிசெ.01

கனடாவில் விமான விபத்தில் 7 பேர் பலியாயினர்.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தின் தலைநகர் டொரான்டோவில் இருந்து கிங்ஸ்டோன் நகருக்கு சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. விமானத்தில் 3 சிறுவர்கள் உள்பட 7 பேர் இருந்தனர். புறப்பட்ட சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை விமானம் இழந்தது. இதையடுத்து, மாயமான விமானத்தை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

இந்த நிலையில் கிங்ஸ்டோன் நகரையொட்டி உள்ள மரங்கள் நிறைந்த பகுதியில் விமானம் விழுந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் தரையில் விழுந்து நொறுங்கியது தெரியவந்தது.

இந்தக் கோரவிபத்தில் விமானத்தில் பயணம் செய்த 3 சிறுவர்கள் உள்பட 7 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவரவில்லை. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது.



# சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் முதல்முறையாக பனிப்பொழிவு

சீனதலைநகர் பெய்ஜிங்கில் குளிர் காலத்தையொட்டி முதல்முறையாக பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் தொடங்கிய பனிப்பொழிவு நேற்றுக் காலை வரை நீடித்தது.

இதனால் பெய்ஜிங்கிலுள்ள சாலைகள், கட்டடங்கள் அனைத்தும் பனிக் கட்டிகளால் மூடப்பட்டு காட்சியளிக்கின்றன. இதேபோல் மரங்கள், செடி கொடிகள், நினைவு சின்னங்கள் உள்ளிட்டவையும் பனிப்போர்வையால் மூடப்பட்டு ரம்மியமாக தோற்றமளிக்கின்றன.

# தொடர் போராட்டங்களினால் பதவி விலகினார் ஈராக் பிரதமர்



ஈராக்கில் தொடர்ந்து நடந்து வரும் போராட்டங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து அந்நாட்டு பிரதமர் அதெல் அப்துல் மஹதி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

சதாம் ஹுசேன் ஆட்சிக்குப் பின்னர் ஈராக்கில் அரசியல் நிலையற்ற தன்மை உருவானது. இதனையடுத்து அந்நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததால், வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. மேலும் அதிகரித்த ஊழலால் மக்கள் அதிருப்தியடைந்து பிரதமர் அதெல் அப்துல் மஹதிக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக பல்வேறு இடங்களில் வன்முறைச் சம்பவங்களும் நடந்தன. கடந்த இரு தினங்களுக்கு முன் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் கொல்லப்பட்டனர். கடந்த இரு மாதங்களாக நடந்து வரும் போராட்டங்களின் விளைவாக 400க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், ஈராக்கில் நடைபெற்று வரும் போராட்டங்களின் எதிரொலியாக, அந்நாட்டு பிரதமர் அதெல் அப்துல் மஹதி, தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

# 4 ஆயிரத்து 800 கி.மீற்றர் பறந்து வலசை வரும் பட்டாம்பூச்சிகள்

வட அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து மெக்ஸிகோவிற்கு லட்சக்கணக்கான மோனார்க்வகைபட்டாம்பூச்சிகள் இடம் பெயர்ந்துள்ளன. இந்தப் பட்டாம்பூச்சிகள் சுமார் 4 ஆயிரத்து 800 கிலோ மீற்றர்கள் தூரம் வலசை மேற்கொண்டு இறுதியாக மெக்ஸிகோ வந்தடைந்துள்ளன.

உலகின் மிகப்பெரிய வலசைகளில் ஒன்றாகக் கருதப்படும் மோனார்க் பட்டாம்பூச்சிகளின் வலசை எண்ணிக்கை கடந்த காலங்களை விட தற்போது குறைந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



கடந்த 1996ம் ஆண்டு நூறு கோடி எண்ணிக்கையில் இருந்த பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கை தற்போது வெறும் மூன்றரைக் கோடியாக குறைந்து போனது. இதற்கு அதன் வாழிடம், குறிப்பிட்ட தாவரங்கள் அழிக்கப்பட்டது போன்றவை காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பேச்சுக்கான அமெரிக்க அழைப்பு; தலிபான்களில் பதில் தாமதமாகும்

தாலிபான்களுடன் பேச்சு நடத்தத் தயார் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ள நிலையில் அமெரிக்காவுடன் மீண்டும் அமைதிப் பேச்சைத் தொடங்குவது குறித்து இப்போதே கருத்து கூற முடியாது என தாலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானுக்கு வியாழக்கிழமை திடீர் பயணம் மேற்கொண்ட அவர், இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசும்போது, தலிபான்களுடனான அமைதிப் பேச்சைத் தாங்கள் மீண்டும் தொடங்க விரும்புகின்றனர் எனத் தெரிவித்தார்.

இதுகுறித்து 'வாட்ஸ் அப்' செயலி மூலம் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஸபிஹுல்லா முஜாஹித் அளித்த பதிலில், அமெரிக்காவுடன் மீண்டும் அமைதிப் பேச்சைத் தொடங்குவது குறித்து இப்போதே கருத்து கூற முடியாது இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை விரைவில் வெளியிட இருக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.





# மாற்றம் வேண்டும் மலையக சமூகத்திடம்!

– ஜெஸ்லின் –

மலையக மக்களை ஏன் எல்லோரும் வதைக்கிறீர்கள்? அவர்கள் யாரெனத் தெரியுமா உங்களுக்கு.... ?

இலங்கை திரு நாட்டின் பூர்வக் குடிகள் என்று சொல்லிக் கொள்ள மலையக மக்களாகிய நம்மால் முடியா விட்டாலும், இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பு நாங்கள் என்று பெருமையாய்ச் சொல்லிக்கொள்ளலாம்.

என்றும், இந்த நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பங்கினை மலையக மக்கள் வகித்து கொண்டிருக்கின்றார்கள். இது நிச்சயமாகப் பெருமைபட வேண்டிய ஒன்றுதான். இந்தப் பெருமைகள் அனைத்தும் கொட்டும் மழையிலும், அட்டைக் கடியிலும் கொழுந்து பறிக்கும் எம்மை ஈன்றெடுத்த தெய்வங்களைச் சாரும். என்ன ஒன்று, யாரும் எம்மைப் பெருமைப் படுத்த விரும்பவில்லை என்பதுதான் வேதனை.

இன்று பல அரசியல் மேடைகளில் மலையக மக்களாகிய நாங்கள் பேசுபொருளாகி இருக்கின்றோம். நம்மை வைத்து நன்றாக அரசியல் செய்கின்றார்கள் நம் தலைவர்கள். ஒரு சிறு திருத்தம் நம்மவர்கள் மட்டுமல்ல, சம காலத்தில் பல தலைவர்கள் மலையக மக்களை வைத்துத் தமது அரசியல் பிழைப்பைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு தலைவனுக்குரிய சிறந்த பண்பு என்னவெனில் தான் சார்ந்த சமூகத்தை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமை, தரக்குறைவாக விளிக்காமை, பிறரிடத்தில் தாழ்த்தாமை. தற்போது நம்முள் ஒரு கேள்வி எழலாம், இந்தப் பண்புகள் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில தலைவர்களிடம் இருக்கின்றனவா என்று.

நிச்சயமாக இதற்கு பதில் நூற்றுக்கு 90 சதவீதம் இல்லை என்பதுதான். என்றாவது மலையக தலைவர்கள் எமது மக்கள் சார் பிரச்சினைகளை துணிவோடு பேச முற்பட்டிருக்கின்றனரா..? – அழுத்தங்கள் பிறப்பிக்கப்படும் வரை.

பகிரங்கமாகவே கூறலாம், மலையக அரசியலின் பெரும் புள்ளிகள், தவிர்க்கமுடியாத சக்திகள் என்றால் தற்போது இரண்டை மாத்திரமே கூற



முடியும். ஒன்று – புதிதாக அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சார்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினர் ஒரு தரப்பு. மற்றது – முன்னாள் அமைச்சர் திகாம்பரம் சார்பான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர். இது தவிர இன்னும் சில இதர அரசியல் தரப்புக்கள் இருக்கின்றன.

இதுவரை காலமும் இந்த அரசியல் தரப்புக்கள் மலையத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன? உருப்படியாக எத்தனை செயல்திட்டங்களை செய்து முடித்துள்ளார்கள்? காலகாலமாய்த் தனி வீட்டுத் திட்டம், தனி வீட்டுத் திட்டம் எனப் பேசியே தமது அரசியலை சிறப்பாகக் கொண்டு செல்கின்றனர். எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன? எத்தனை லயன் அறைகள் தனி வீடுகளாக மாறியுள்ளன? எத்தனைக் காலத்திற்கு இந்தத் தனி வீட்டுத் திட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு சுற்றபோகின்றார்கள்?

வீதிகளைச் செப்பனிட்டோம் என்பார்கள். எத்தனை வீதிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளன? எத்தனை வீதிகள் அமைத்து பல ஆண்டுகளாக, அதிகம் வேண்டாம் ஓர் இரண்டு ஆண்டுகள் சரி சேதமடையாமல் இருக்கின்றன..? பதில் கூற முடியுமா? அனைத்தும் எமது அரசியல் தலைவர்களின் செயல்திறன். பாராட்டுக்குரிய ஒன்றுதான். விருதுகளே கொடுக்கலாம் – அதீத அபிவிருத்திக்காக.

எமது தலைவர்களின் அடுத்த ஆயுதம், மக்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெற்றுக் கொடுப்போம் என்பது. எத்தனை ஆண்டுகளாக கூறிவிட்டார்கள்? இதை வைத்து எத்தனைப் பேர் நாடாளுமன்றம் சென்று அமைச்சுப் பொறுப்பை ஏற்று அரசியல் புரட்சியே செய்து விட்டார்கள் தெரியுமா? ஆனால் என்ன, ஊதியம்தான் கிடைக்கவில்லை இன்னும். ஆனால்தலைவர்களின் வார்த்தைகள் மட்டும் நாளையே ஆயிரம் ரூபாவை கையில் கொண்டு வந்து கொடுப்பதை போலத்தான் இருக்கும். சும்மாவா சொன்னார்கள் அரசியல்வாதிக்குப் பேச்சுத்திறன் முக்கியம் என்று.

இதையெல்லாம் விட்டுவிடுவோம், தற்போது மலையக மக்களுக்கான மரியாதை என்பதே கேள்விக்குறியாகிவிட்டது. தேர்தல் காலங்களில் வீடு வீடாய் வந்து எமது தாய்மார்கள் செய்து வைத்த ரொட்டியைச் சாப்பிட்டு (சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எமது தேசிய உணவு ரொட்டிதானே.. இதில் மறைப்பதற்கென்ன உண்டு?) அழகான நாடகங்களை அரங்கேற்றி, வாக்குக் கேட்க தெரிந்த அரசியல் தலைவர்களுக்கு தொலைக்காட்சிகள், பொதுவெளிகள் என்று வந்தால் மலையக மக்கள் படிக்காத முட்டாள்களாகின்றோம், பாவப்பட்ட ஜென்மங்கள் ஆகின்றோமா?

ஒருவர் நண்டு என விளிக்கிறார். ஐம்பது வைத்தியர், ஐம்பது பொறியியலாளர் என கிண்டலடிக்கின்றார். நிச்சயமாக நீங்களலெல்லாம் சந்தா என்ற பெயரில் எம்மை சுரண்டி உண்ணாமலிருந்தால் ஐம்பது என்ன ஆயிரம் வைத்தியர்கள், ஆயிரம் பொறியியலாளர்கள் எம்மில் உருவாகுவார்கள். அதற்குத்தான் நீங்கள் வழிவகுத்தீர்களா அல்லது வழிதான் விட்டீர்களா என்ன?

வறுமை, உயர்தரத்திற்கு மேல் படிக்கவேண்டும் என்றால் எனது தலையைத்தான் அடமானம் வைக்க வேண்டும் என எம் தாயார் கூறும்போது, கேட்கும் எமக்கு தொண்டைக்குழி அடைக்கும். இது எமது சாபக்கேடு என நொந்துக் கொண்டு பையைத் தூக்கிக்கொண்டு தலைநகரத்திற்கு வேலைத் தேடி புறப்படச் சொல்லும். அப்போது எம் தந்தை தனது கையறு நிலையை எண்ணி கூனிக் குறுகிய வேதனையை நீங்கள் என்றாவது உணர்ந்ததுண்டா?

ஆனால், நீங்கள் நினைப்பதைப் போல மலையகம் அல்ல... ஐம்பது இல்லாமலிருக்கலாம் அதில் ஒரு சிறு துளியேனும் மலையகத்தவர் முன்னேறிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

மற்றுமொருவர் மலையகத்தவரை, அவனுக்குத் தெரியும் என ஒருமையில் விளிக்கின்றார். நீங்கள் மலையக மக்களின் பிரதிநிதியாக இருக்கலாம். அதற்காக மலையக மக்கள் எல்லாம் உங்களது அடிமை என நினைத்தீர்களா? வெளிநாட்டில் சென்று படித்து பட்டம்பெற்றேன் என்பது முக்கியமல்ல. பேசும் வார்த்தையில் கண்ணியம் வேண்டும். ஒருவரின் பண்பை, அவர் பேசும் வார்த்தைகளே தீர்மானிக்கின்றன.

படித்த படிப்பிற்கு பிரயோஜனம் இல்லாமல் தந்தைக்குபின் நான் என தலைமைக்காக காவல் காக்கும், இந்தியாவைப் போல குடும்ப அரசியலை நடத்த முற்படும் நீங்களெல்லாம் உழைத்து உண்ணும் எங்களைப் பற்றி பேசுவதற்கு துளியும் தகுதியற்றவர்கள். பத்து, பதினைந்து கிலோ மீற்றர்கள் நடந்து சென்று படித்து பட்டம் பெற்றவர்களும் எம் மலையகத்தில் இருக்கின்றனர். அவர்களின் கால்களின் தூசுக்கு நிச்சயமாக நீங்கள் ஈடாக மாட்டீர்கள் என்பதை மறவாதீர்கள்.

இதனைத் தவிர, இந்த நாட்டில் வாழும் எமது சக இனங்களை நாங்கள் எப்போதுமே மதிப்பதுண்டு. எமது பகுதிகளில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்களவர்களுடன் நாங்கள் என்றுமே ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் பிரிவினை என்பதை அண்மையில் ஊடகங்களின் வாயிலாக விதைத்தார் ஒரு முன்னாள் அமைச்சர்.

எம்மைத் தரைகுறைவாக பேசுவதாக எண்ணி, 'தோட்டக்காட்டான்' என்றார். அந்த வார்த்தையை நாங்கள் இழிவாக எண்ணவில்லை. காடுகளாக இருந்தவைகளை செல்வம் கொழிக்கும் தோட்டங்களாக மாற்றியமைத்த உழைப்பாளிகள் நாங்கள். மன்னிக்கவும் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா அவர்களே, உங்களது எண்ணம் பொய்த்துப் போனது. எங்களது உழைப்பை நீங்கள் கொச்சைப் படுத்தலாம். ஆனால் உழைக்க முடியாது. உங்களை விட நாங்கள் என்றுமே மேல்தான்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

“ என்றும், இந்த நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பங்கினை மலையக மக்கள் வகித்து கொண்டிருக்கின் றார்கள். இது நிச்சயமாகப் பெருமைபட வேண்டிய ஒன்றுதான். இந்தப் பெருமைகள் அனைத்தும் கொட்டும் மழையிலும், அட்டைக் கடியிலும் கொழுந்து பறிக்கும் எம்மை ஈன்றெடுத்த தெய்வங்களைச் சாரும். என்ன ஒன்று, யாரும் எம்மைப் பெருமைப் படுத்த விரும்பவில்லை என்பதுதான் வேதனை.

# கோட்டாபயவுடனான பேச்சு ஆக்கபூர்வமானதாக இருந்தது

## இந்தியப் பிரதமர் மோடி ருவிட்



புதுடில்லி, டிசெ. 01

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று முன் தினம் நடத்திய பேச்சு ஆக்கபூர்வமானதாக இருந்ததது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சந்திப்புத் தொடர்பாக கீச்சகத்தில் அவர் இட்டுள்ள பதிவு ஒன்றில் –

பேச்சுக்கள் மிகவும் ஆக்கபூர்வமானவையாக இருந்தன. பல்வேறு இருதரப்பு மற்றும் பூகோள விவகாரங்கள் குறித்து நாங்கள் கருத்துக் களைப் பரிமாறிக் கொண்டோம்.

இலங்கையிலுள்ள எமது சகோதர, சகோதரிகளின் அபிவிருத்தி அபிலாஷைகளுக்கு ஆதரவளிப்பதற்கு இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு நன்றி தெரிவித்து பதிவு ஒன்றை இட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உங்களின் ஆதரவு எங்களுக்கு என்றும் விலை மதிப்பற்றதாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மாட்டுடன் ஓட்டோ மோதி விபத்து ஒருவர் சாவு! இருவர் படுகாயம்!!



வவுனியா, டிசெ. 01

முச்சக்கர வண்டி மாட்டுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.15 மணியளவில் வவுனியா விளக்குவைத்த குளம் பகுதியில் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த ஓட்டோ வீதியில் நின்ற மாட்டுடன் மோதுண்டு விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அவசர அம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் 40 வயது மதிக்கதக்க ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஜெய்சங்கருக்கு கோட்டாபய கொழும்பில் கொடுத்த உறுதி

புதுடில்லி, டிசெ. 01

அனைத்து இலங்கையர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அதிபராக தாம் இருக்கிறார் என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையில், ஜனாதிபதியின் இந்தியப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ உரையாற்றியபோது, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற ஒரு நாள் கழித்து நான் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தேன். எமது இருதரப்பு உறவுகள் குறித்து நாங்கள் கலந்துரையாடினோம்.

இதன்போது, தான் இப்போது அனைத்து இலங்கையர்களுக்கும் ஜனாதிபதியாக இருப்பதாக கோட்டாபய ராஜபக்ஷ எம்மிடம் உறுதி அளித்தார்.



அந்த வாக்குறுதியை நாங்கள் கவனிக்கவேண்டும். என்று அவர் குறிப்பிட்டார். (ஐ)

# யு.என்.டி.பியின் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளராக இலங்கைத் தமிழ்ப்பெண்




இலங்கைத் தமிழ்ப் பெண்ணான, கன்னி விக்னராஜா ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் (யுஎன்டிபி) ஆசிய – பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளராக இன்று டிசெம்பர் முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

முன்னதாக இவரை ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்துக்கான உதவிச் செயலாளர் நாயகமாகவும், உதவி நிர்வாகியாகவும் நியமித்திருந்தார்.

கன்னி விக்னராஜா ஐ.நா முறைமைகளில் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான நீண்டகால அனுபவம் கொண்டவராவார்.

இவர் யு.என்.டி.பியின் நாடு, பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் ஆசிய மற்றும் ஆபிரிக்க கண்டங்களில் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் பிறந்த கன்னி விக்னராஜா பிறின்ஸ்ரென் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமாணி பட்டம் பெற்றவர். அமெரிக்காவின் பிறின் மார் கல்லூரியில் பொருளாதாரத் துறையில் இளமாணி பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடத்தப்பட்ட தூதரகப் பெண் பணியாளர் வாக்குமூலம் அளிக்கும் நிலையிலில்லை!

கொழும்பில் கடத்தப்பட்டு அச்சுறுத் தப்பட்ட தமது தூதரகத்தின் பெண் பணியாளர், உடல் நிலை மோசமாக இருப்பதால், தற்போது வாக்குமூலம் அளிக்கும் நிலையில் இல்லை என்று கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பெண் பணியாளர் ஒருவர் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2019 நவம்பர் 25 ஆம் திகதி சுவிஸ் தூதரகத்தின் இலங்கைப் பணியாளர் தொடர்பில் பாரதூரமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தூதரகப் பணியாளர் பலவந்தமாகக் கொழும்பு வீதியில் தடுத்து நிறுத்தப்பட்டார், காரில் ஏறுமாறு மிரட்டப்பட்டார்,

அதன் பின்னர் இனந்தெரியாத நபர்களால் கடுமையான அச்சுறுத்தப் பட்டதுடன் தூதரகம் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு மிரட்டப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல பிழையான தகவல்கள் பரவுகின்றன. இதனால், சுவிஸ் தூதரகம் பின்வரும் தெளிவுபடுத்தல்களை வெளியிட விரும்புகிறது.

சுவிஸ் தூதரகம் உடனடியாக அதிகாரபூர்வமான முறைப்பாட்டை தாக்கல் செய்ததுடன் பொலிஸ் விசாரணைக்கு ஆதரவாகவும்,விசாரணையை ஆரம்பிப்பதற்காகவும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றது.

மோசமடைந்து வரும் உடல்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டவர் தற்போது வாக்குமூலம் அளிக்கும் நிலையில் இல்லை என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# நிசாந்த சில்வாவை இலங்கைக்கு நாடு கடத்த மறுத்துள்ளதா சுவிஸ்?

கொழும்பு, டிசெ. 01

சுவிட்சர்லாந்துக்கு தப்பிச் சென்ற குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரி நிசாந்த சில்வாவை, நாடு கடத்துமாறு இலங்கை அரசு தம்மிடம் கோரிக்கை எதையும் விடுக்கவில்லை என்று கொழும்பில் உள்ளசுவிஸ்தூதரகம்தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் -

இலங்கைகுற்றவிசாரணைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைச் சுவிட்சர்லாந்திலிருந்து நாடு கடத்துவதற்கு சுவிஸ் அரசு மறுத்துவிட்டது எனகுற்றச்சாட்டுகள் வெளியாகின்றன.

அவ்வாறானவேண்டுகோள் எதுவும் விடுக்கப்படவில்லை என்றுசுவிஸ்தூதரகம்தெரிவித்துள்ளது. (ஐ)



காலைக்கதிர் Kalaikathir





# உலக எய்ட்ஸ் தினம்

உலக எய்ட்ஸ் நாள் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

இந்நாள் எய்ட்ஸ் நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

எய்ட்ஸ் தினம் பற்றிய எண்ணக்கரு முதலாவதாக 1988இல் நடைபெற்ற, எய்ட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர் மாநாட்டில் உருவானது. அதன் பிறகு அரசுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம்முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

> முதல் இரண்டு வருடங்களில், எய்ட்ஸ் தினத்திற்கான கருப்பொருள் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரையே சுற்றி இருந்தது. எய்ட்ஸால் அவதியுறுபவர்கள் மற்றும் எச். ஐ.வியால் பாதிக்கப்படுபவர்கள் எல்லா வயதினருமே என்பதனால் இந்தக் கருப்பொருள்கள் பின்பு கடினமாக எதிர்க்கப்பட்டன.

1981 ஆம் ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டு வரை எய்ட்ஸ் நோயால் இறந்தவரின் எண்ணிக்கை 250 லட்சங்களுக்கும் மேல். மற்றும் 2007ஆம் ஆண்டு வரை 332 லட்சம் மக்கள் இந்நோயுடன் வாழ்ந்து வருகின்றனர். இதனால் இந்நோய் வரலாற்றிலேயே மிக கொடூரமான தொற்றுநோயாகக் கருதப்படுகிறது.

சமீபத்திய சிகிச்சை முறைகளின் முன்னேற்றம் மற்றும் கண்காணிப்பின் கீழ் இருந்தும், எய்ட்ஸ் நோயால் உலகெங்கிலும் 2007ஆம் ஆண்டில் 20 லட்சம் உயிரிழப்பு ஏற்பட்டது. இதில் 2,70,000 குழந்தைகள்.

ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பில் எயிட்ஸ்க்கான உலகளாவிய நிகழ்ச்சியின் பொது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தாமஸ் நெட்டேர் எனும் இருவரால் 1987ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டதே உலக எய்ட்ஸ் தினம்.

தங்கள் யோசனையை எயிட்ஸ்க்கான உலகளாவிய நிகழ்ச்சியின் இயக்குனர் முனைவர் ஜோனதன் மன்னிடம் கொண்டு சென்றனர் இருவரும். முனைவர் மன்னுக்கு இது பிடித்து போகவே, அவர் இதை அங்கீகரித்து, 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் நாளை உலக எய்ட்ஸ் தினமாக கடைபிடிக்க பரிந்துரை செய்தார்.

டிசெம்பர் முதலாம் திகதியை அத்தினமாகக் கடைப்பிடிக்க பன் தான் யோசனை வழங்கினார். ஏனெனில் அப்பொழுதுதான் மேற்கத்திய



செய்தி நிறுவனங்களின் கவனம் அவ்வருடம் (1988) நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முழுமையாக ஒலிபரப்பு செய்து ஓய்ந்திருக்கும். ஆதலால், புது செய்திக்காகக் காத்திருக்கும் அமெரிக்க செய்திநிறுவனங்களைக் கொண்டு இந்நாளை உலகம் முழுதும் கடைப்பிடிக்க அணுகுவது சரியானது என்று தீர்மானித்தார்கள்.

மேலும், டிசம்பர் ஒன்று என்பது தேர்தல் முடிந்து சில நாள்களுக்கு பின்னும், கிறிஸ்மஸ் விடுமுறை தொடங்க சில நாள்களுக்கு முன்னும் வருவதால், அதுவே உலக நாள்காட்டியில் சரியான நாளாக அமையும் என்று பன்ஸ் மற்றும் நெட்டேர் உணர்ந்தார்கள்.

எச்.ஐ. வி/எய்ட்ஸ்க்காக கூட்டு ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சி 1996ஆம் ஆண்டு செயல்பாட்டுக்கு வந்தது, மேலும் இதுவே உலக எய்ட்ஸ் தினத்திற்கான திட்டம் மற்றும் ஊக்குவிப்பை செய்தது. ஒரே நாளில் செய்வதற்கு பதிலாக



1997ஆம் ஆண்டு இந்நிகழ்ச்சி உலக எய்ட்ஸ் பிரச்சாரத்தை உருவாக்கி, அதன் மூலமாக வருடம் முழுவதும் செய்திப்பரிமாற்றம், தடுப்பு மற்றும் கல்விப் போதனை வழங்கின.

முதல் இரண்டு வருடங்களில், எய்ட்ஸ் தினத்திற்கான கருப்பொருள் குழந்தைகள் மற்றும் இளம் வயதினரையே சுற்றி இருந்தது. எய்ட்ஸால் அவதியுறுபவர்கள் மற்றும் எச். ஐ.வியால் பாதிக் கப்படுபவர்கள் எல்லா வயதினருமே என்பதனால் இந்தக் கருப்பொருள்கள் பின்பு கடினமாக எதிர்க்கப்பட்டன.

2004ஆம் ஆண்டு உலக எய்ட்ஸ் பிரசாரம் ஒரு சுதந்திர சங்கமாக மாறியது. ஒவ்வொரு வருடமும், போப்பரசர்கள் இரண்டாம் ஜான்பால் மற்றும் பதினாறாம் பெனெடிக்ட் உலக எய்ட்ஸ் தினத்தன்று நோயாளிகள் மற்றும் மருத்துவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வெளியிடுவார்கள்.

# மாற்றம் வேண்டும் மலையக...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த சமயத்தில், கோபம் கொண்டெழுந்த முன்னாள் அமைச்சர் மனோ கணேசனிற்கு நாம் ஆதரவாய் நிற்போம் என ஒரு கூட்டம் – இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பானவர்கள் – அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். முதலில் உங்களைத் திருத்துங்கள். நீங்கள் தவறாக மலையக மக்களைப் பற்றி கருத்துக்களை முன்வைக்கின்றீர்கள், மலையக மக்கள் பற்றிய உங்களது எண்ணங்கள் கூட தவறானவையே. நீங்கள் அதிலிருந்து முதலில் வெளியில் வாருங்கள். அதன் பின்னர் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவின் கூற்றுக்கு எதிராகவும், முன்னாள் அமைச்சர் மனோ கணேசனுக்கு ஆதரவாகவும் குரல் கொடுக்கலாம்.

அடுத்தது, எமது மலையக இளைஞர்கள். ஏன் நாங்கள் இன்னும் நுனிப்புல் மேயும் பசுக்களாக இருக்கின்றோம்? மலையகம் தொடர்பில் ஒவ்வொரு சர்ச்சையும் எழும்போது முகநூலில் மட்டும் வரிந்து கட்டிக் கொண்டு குரல் கொடுத்து, சண்டை பிடித்து சமூக வலைத்தள போராளியாக மாத்திரம் இருந்து விடுகிறீர்களே.. நிச்சயமாக இந்த நிலையை எண்ணி வேதனைதான் கூடுகின்றது.

எமது தாய். தந்தையரின் வேதனத்தைப் பெற்றுக் கொள்ள அன்று காலி முகத்திடலில் ஒன்று திரண்ட கூட்டத்தை நினைத்து பிரம்மிப்பாக இருந்தது. ஆனால் அவை அனைத்தும் முகநூல் போராளிகள் என அறிகையில் மனம் வெதும்புகிறது. மலையக இளைஞர்களின் உணர்திறன் குறைந்து விட்டதா என எண்ணத் தோன்றுகின்றது.

முகநூலில் உங்களது சிந்தனைகளை, உங்களது கோபத்தினைப் பார்க்கும் போது நன்றாகத்தான் இருக்கின்றது. அதை, அந்த மாற்றத்திற்கு செயல் வடிவம் கொடுத்தால் எமது அடுத்த தலைமை முறையின் எதிர்காலமே மாறும். நான் வன்முறையை கூறவில்லை. மனதளவிலான மாற்றத்தையே கேட்டு நிற்கின்றேன்.

இன்னும் சில இளைஞர்கள், பாட்டன், தந்தை காலத்திலிருந்து நாங்கள் இவர்கள் பக்கம்தான் என பழைய பஞ்சாங்கத்தைப் பாடிக்கொண்டு, அறியாமை எனும் போர்வையைப் போர்த்திக் கொண்டு திரிகிறார்கள். முதலில் உங்கள் தலைவன் மீதான பக்தியை அறுத்தெறியுங்கள். அந்த வட்டத்திலிருந்து வெளியில் வாருங்கள். எமது முந்தைய தலைமுறையினரை, அடுத்ததாக எம்மை, அடிமையாக வைத்திருந்த ஒரு கூட்டத்திடம் எதிர்கால உங்கள் சந்ததியை நீங்களே வழியச்சென்று அடிமைகளாக அடகு வைக்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

இன்று மலையக மக்களாகிய நாங்கள் எத்தனைத் தூரம் உயர்வடைந்துள்ளோம் என்பதை எண்ணிப் பாருங்கள், ஏன் மலையகத் தமிழர் ஒருவர் உயர் நீதிமன்ற நீதியரசராகக் கூட இருக்கின்றார். இத்தனைத் தூரம் நாம் வளர்ச்சிக் கண்டுள்ளோம்.

இவற்றைச் சற்றே சிந்தியுங்கள், படித்த கல்விமான்கள் பலர் எம்மத்தியில் இருக்கின்றனர். மாற்றத்தை ஏற்படுத்த அவர்களால் முடியும். ஆனால் அவர்களிலும் சிலர் இவ்வாறு அரசியல்வாதிகளின் பின்னால் கூலிக்கு மாறடிப்பதுதான் வருந்தத்தக்கது.

இன்று வடக்கு, கிழக்கினை எடுத்துப் பாருங்கள். எது, என்னவானாலும் அவர்கள் சார் சமூகத்தை அவர்களே என்றாவது விட்டுக்கொடுக்கின்றார்களா? தமது சமூக பிரச்சினைகளை பேச பின்னிற்கின்றனரா? ஆனால் நாம் ஏன் இன்னும், ஒருவரின் பின்னால் ஒருவர் என்ற கோட்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றோம்? நாம் யார் என்பதை நாம் எப்போது உணரப் போகின்றோம்?

படித்த கல்விமான்களுக்கு ஒரு சிறு வேண்டுகோள், நீங்கள் மலையகத்தில் புரட்சி செய்ய வேண்டாம், மாற்றங்களை ஏற்படுத்த வேண்டாம், உங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துங்கள். அரசியல்வாதிகளின் பின்னால் செல்லும் படித்த இளைஞர்களே நீங்கள் உங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துங்கள். முதல் விதை உங்கள் மனதில் துளிர்க்கட்டுமே.

அதைவிடுத்து வெறுமனே உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்களாலும், கருத்து மோதல்களாலும் மாற்றத்தினை ஏற்படுத்த முடியாது. அறிவுபூர்வமாகச் சிந்திப்போம். நாளைய மலையகம் எமக்கு பொற்காலமாக அமையட்டும்.

உங்களது தந்தை ஒரு தரப்பினருக்கு ஆதரவு என்றால் இருக்கட்டும். அவர்களை மாற்ற முடியாவிட்டால் நீங்கள் மாறுங்கள். மாற்றம் உங்களில் இருந்து தொடங்கட்டும். சிந்தனையால் ஒன்றிணைந்து அடுத்த தலைமுறையையாவது தனி வீடு, உழைப்புக்கேற்ற ஊதியம், வறுமை என்பவற்றிலிருந்து விடுவித்து சுதந்திரமாய் வாழ விடுவோம். மாற்றம் மலையக இளைஞர்கள் கையிலேயே......!

நன்றி 'தமிழ்வின்'


முருகபூபதி



## வாழ்வை எழுதுதல்

# தேவாலயங்களில் இறுதி மூச்சைக் காணிக்கையாக்கிய ஆத்மாக்கள்!

அந்தத் தேவாலயத்தின் முன்னால் நிற்கின்றேன். சில மாதங்களுக்கு முன்னர்தான் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அங்கு பலர் தங்கள் இறுதி மூச்சைக் காணிக்கையாக்கினர்.

அவர்களின் பெயர்ப் பட்டியல் பதிவான காட்சிப் பலகையின் முன்னால் நின்று மௌன மாக பிரார்த்தித்தேன். பிரார்த்தனையின் போது அமைதி அவசியம் என்று சிறு வயதில் எனது அம்மாவும் பாட்டியும் அடிக்கடி சொல் லித் தந்திருக்கிறார்கள்.

எங்கள் வீட்டில் நவராத்திரி, கந்தசஷ்டி விரத காலங்களில் பிரார்த்தனை வழிபாடு நடக்கும் போது அதற்கு இடையூறு தரும் வகையில் சத்தம் போடக்கூடாது, குழப்படி செய்யக் கூடாது என்று அம்மாவும் பாட்டியும் எச்சரித்துக் கொண்டே இருப்பார்கள்.

அவர்களுக்குப் பயந்து அமைதியாக இருப் போம். வெள்ளிக்கிழமைகளிலும் திருவிழாக் காலங் களிலும் கோயில்களுக்குச் செல்லும் போதும், அங்கே அமைதியாக இருக்க வேண்டும் என்றுதான் புத்தி சொல்லி அழைத்துப் போவார்கள்.

செவ்வாய்க்கிழமைகளில் அம்மா, எங்கள் ஊரில் சிலாபம் செல்லும் பாதையில் தழுபொத்தை என்ற இடத்தில் வரும் அந்தோனியார் கோயிலுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கு மெழுகுவர்த்தி ஏற்றி வணங்கும் போது, அம்மா கையோடு எடுத்து வரும் தேங்காய் எண்ணெய்ப் போத்திலை என்னிடத் தில் தந்து அங்குள்ள தீப விளக்கிற்கு எண்ணெய் வார்க்குமாறு சொல்வார்கள்.

அந்தோனியார் கோயில் மிகவும் அமைதியாக இருக்கும். வாரம் தோறும் செவ்வாய்க்கிழமைகளில் அங்கு செல்வோம். கோயில்களுக்கு வெள்ளிக்கிழமை களில் செல்வோம். ஊரின் புறநகரத்திலிருக்கும் பௌத்த விகாரைக்கு வெசாக், பொசன் பண்டிகை காலங்களில் செல்வோம். எனினும் அங்கிருந்த பள்ளிவாசல்களுக்கு செல்லும் பழக்கம் இருந்த தில்லை. ஆயினும், அங்கிருந்த அல்கிலால் மகாவித் தியாலயத்தில் மேல்வகுப்பு படிக்கும் போது, அவர்களின் பிரார்த்தனைகளை கேட்பதுண்டு. எனக்கு ஆசிரி யர்களாக இருந்தவர்களில் அநேகர் இஸ்லாமியர். மூவினத்தவர்களும் செறிந்து வாழ்ந்த பிரதேசமாக எங்கள் ஊர் விளங்கியமையால், மூவினத்து நண்பர்களையும் சம்பாதித்திருக்கின்றேன்.

ஒரு காலத்தில், சிறு வயதில் அமைதியை நாடி வேண்டுதலுக்காகச் சென்ற கோயில்கள், தேவால யங்கள், விகாரைகள் முன்பாக பொலிஸ் காவலையும் ஆயுதப்படையினர் நிற்பதையும் இம்முறை பயணத் தில் கண்டு மனம் அவஸ்தைப்பட்டது. வெள்ளிக்



கிழமை தொழுகை வேளைகளில் அங்கிருக்கும் பள்ளிவாசல்களின் வாயில்களில் மேலதிகமாக ஆயு தப்படையினர் நின்றமையையும் கண்டேன்.

எல்லாம் கடந்த ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த தாக்குதல்களின் எதிரொலிதான்.

இலங்கையில் நான் வசித்தகாலப் பகுதியில் இப்படிப் பட்ட காட்சிகளைக் காணவில்லை. எவ்வாறு இந்த மாற்றங்கள் நிகழ்ந்தன. என யோசித்துக் கொண்டு நீர்கொழும்பு கட்டுவபிட்டிய தேவாலயத் தைச் சுற்றிப் பார்க்கிறேன்.

தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்து வந்த பின்னர், எங்கள் தேசத்தின் கோயில்கள், மசூதி கள், தேவாலயங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம் பவங்கள் அடுத்தடுத்து நினைவுக்கு வருகின்றன.

1990 ஆம் ஆண்டு, கிழக்கிலங்கை- காத்தான் குடியில் இரண்டு பள்ளிவாசல்களில் தொழுகைக்கு வந்திருந்த பலர் மீது, அவர்களை வேண்டாதவர் களினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு நூறுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

1995 ஆம் ஆண்டு இலங்கையின் வடபுலத்தில் நவாலி புனித பேதுருவானவர் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த பலரில் நூற்றுக்கும் அதிக மான தமிழ் பொதுமக்கள் விமானப்படையின் குண்டுத் தாக்குதலில் பலியாகினர். இவர்களும் அந்த தேவாலயத்திற்கு வேண்டுதலுக்காகத்தான் சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு புனிதமரியாள் தேவாலயத்திற்கு 2005 ஆம் ஆண்டு யேசுபாலகன் பிறந்த தினத்தில் வழிபடச் சென்றார், அந்தப் பிரதேச நாடாளுமன்ற



உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம். அவர் தமிழ் மக் களின் மனித உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் எழுப்பி வந்தவர்.

ஜோசப் பரராஜசிங்கம். யேசுபாலக னிடத்தில் வேண்டுதலுக்காகச் சென்றவர் அவர். வேண்டாதவர்களினால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொழும்பு கொச்சிக்கடை பொன்னம் பலவாணேஸ்வரர் கோயிலுக்கு 2008 ஆம் ஆண்டு முதலாம் திகதி ஆங்கிலப் புதுவருடம் பிறந்த வேளை யில் வழிபடச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான தியா கராஜா மகேஸ்வரன், அவரை வேண்டாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வருடம் (2019) ஏப்ரில் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தின்போது கொழும்பு கொச் சிக்கடை அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய செபஸ்தியார் தேவாலயம் , மட்டக் களப்பு சீயோன் தேவாலயம் என்பவற்றுக்கு வேண் டுதலுக்குச் சென்றவர்கள் மீதுதான் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு பலர் கொல் லப்பட்டனர்.

இவ்வாறு வேண்டுதலுக்காக சென்றவர்கள் மீது, ஏன் கொலை வெறி தாக்குதல்கள் நடந்தன!? இந்த ஈனச் செயல்களைச் செய்தவர்களுக்கு சிறு வயதில் நல்ல புத்தி சொல்லிக் கொடுக்கத்தக்க அம்மாமார், பாட்டிமார், ஆசான்கள் கிடைக்கவில்லையா..?

எனினும் அந்த தீய சக்திகளுக்கு எமது சமூகமும் ஊடகங்களும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெயரை சூட்டி வைத்திருக்கின்றன.

அதுதான் இனந்தெரியாதவர்கள்

சம்பவங்கள் நடந்த பின்னர் விசாரணை என்ற பெயரில் ஏதோவெல்லாம் நடக்கும். நாடாளுமன்றத் திற்கு சென்றிருப்பவர்கள் விவாதிப்பார்கள். தேர்தல் காலம் வந்ததும், எதிரணியிலிருப்பவர்கள், நாம் பத வியிலிருந்திருந்தால், மக்களை காப்பாற்றியிருப்போம் என்பார்கள். அதற்கு எதிர்வினையாற்றும் வகை யில், எதிரணியினர் பதவியிலிருந்த காலத்தில் நடந்த சம்பவங்களை ஆளும் தரப்பு பட்டியலிட்டுப் பேசும்.!

மக்களிடம் ஆணை கேட்பது அதிகாரத்திற்கா கவே. அதனைப் பெறுவதற்கு ஏட்டிக்குப் போட்டியாக தேர்தல் பிரசார மேடைகளை முடிந்த வரையில் பயன்படுத்திக் கொள்வார்கள்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடப்பதற்கு முன்பே, புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்திருந்தும், எதனையும் செய் யாமல் கையாலாகத்தனமாக இருந்தவர் களையும் தாக்குதல்களின் சூத்திரதாரிக ளையும் விசாரிப்பதற்காக நாடாளுமன்றத்தி னால் ஒரு விசாரணை தெரிவுக் குழுவும் நியமிக்கப்பட்டது.

அதிலும் பெரிய இழுபறிகள் நிகழ்ந்தன.

தேசியப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதி காரி சிசிர மெண்டிஸ் அந்த விசாரணைக் குழுவின் முன்னால் தோன்றி சாட்சிய மளித்தார்.

அதனை அவதானித்தார் சம்பவங்கள் நடந்தவேளையில் நாட்டிலிருக்காத தேசத் தின் அதிபர் மைத்திரியார். உடனே என்ன செய்தார்?

நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னி லையில் சாட்சியமளித்தவர்கள், பாதுகாப்பு துறையிலிருந்து வெளியேறியவர்கள் என்று ஒரு பெரிய குண்டைப்போட்டார். அது தேவா லயங்களில் பாவிக்கப்பட்ட குண்டுகளை விட மிகவும் வலிமையானது.

அந்த பொன்னான வாக்கைக் கேட்டதும் சிசிர மெண்டிஸ் தனது ராஜினாமாக் கடிதத்தை பாதுகாப்பு செயலாளர் ந்த கோட்டேகொட விடம் கையளித்துவிட்டு, தனக்கு சுகமில்லை எனச்சொல்லி ஓய்வுக்குச்சென்றார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலை யில் புலனாய்வு அதிகாரிகள் வரவழைக்கப் பட்டு, விசாரணைக்கு உட்படுத்துவதைத் தான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் மற்றும் ஓர் அதிரடிக் குண்டைப்போட்டார் மைத்திரியார்.

இவ்வாறெல்லாம் அவர் செய்யப்போகி றார் என்பதைத் தெரிந்துகொண்டே தெரிவுக் குழு பல வாரங்களாக விசாரணை செய்து கொண்டிருந்தது. ஊடகங்களும் அந்த விசாரணை வாக்குமூலங்களுக்காக பக் கங்களை நிரப்பிக்கொண்டிருந்தன. நாமும் படித்துத் தொலைத்(ந்)துக் கொண்டிருந்தோம்.

அங்கு சாட்சியமளித்த முஸ்லிம் அமைப்புகளின்

## அரசியல்வாதிகளே!.

## நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்!?

பிரதிநிதிகள் பேசிய சுத்தமான சிங்கள மொழியைக் கேட்டு வியந்துபோன – எதிர்காலத்தின் பாதுகாப்பு அமைச்சர் பதவிக் கனவில் மிதந்த ஃபீல்ட் மார்ல் சரத்பொன்சேக்கா, என்னால் கூட அவ்வாறு அழகாக சிங்களம் பேசமுடியவில்லையே என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

தேசிய பாதுகாப்பு சபையை உரிய முறையில் (முன்னாள்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்ட வில்லை எனப் பாதுகாப்பு முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோ நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்.

(17 பக்கம் பார்க்க...)



## தாய்லாந்து, ஜப்பான் மக்களை ஆசீர்வதிக்கும் டுவிட்டர் செய்தி

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தாய்லாந்து ஜப்பான் ஆகிய இரு நாடுகளில் மேற்கொண்ட 32வது திருத்தூதுப் பயணத்தை நிறைவு செய்து இப்பயணத்தின்அனுபவங்களைப்பகிர்ந்துகொண்டார். நான் மேற்கொண்ட திருத்தூதுப் பயணம் எனக்கு வழங்கப்பட்ட ஒரு கொடையாதலால் நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இறைவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியாகும்.

காலைக்கதிர் Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL


உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## ஆண்டவரைச் சந்திக்கும் தருணம் தான் மரணம்

வாழ்வின் இறுதிவேளையில் ஆண்டவர் நம் கதவைத் தட்டும்போது, நம்பிக்கையுடன் அதைத் திறப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும், அதற்காகநாம்ஒருவர்ஒருவருக்காகச்செபிப்போம். இறப்பு எப்போது வரும் என்பது யாருக்குமே தெரியாது, நாம் நிரந்தரமானவர்கள் என்ற எண்ணத்தில் பல நேரங்களில் செயல்படுகிறோம், இந்த பலவீனமான நிலையை, வாழ்வில், எல்லாருமே கொண்டிருக்கிறோம் என்றரர் திருத்தந்தை.

# ஆயத்துவப் பணியில் ஐந்தாம் ஆண்டில் வண.கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்



யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம்ஆண்டகை தம் ஆயர்த்துவப் பணியின் ஐந்தாவது ஆண்டில் கால் பதிக்கும் வேளை (2015 - 2019) யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் யாழ் மறை மாவட்ட குருக்கள், துறவிகள் யாழ் மறை மாவட்ட பொதுநிலை இறைமக்களின் வாழ்த்துக்களை காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களோடு இணைத்துத் தெரிவிக்கிறோம்.

ஆயர்ப்பணி பெருமையையும் பெரும் புகழையும் பெற்றுத் தருகின்ற ஒரு பணியாகப் பொதுவாகப் பார்க்கப்படுகின்ற போது அங்கே பார்க்கப்படாத ஒரு பகுதியும் உண்டு. வெண்ணிற ஆடையில் சமுதாயத்தில் மதிப் போடும் மரியாதையோடும் வலம் வரும் இவர்கள் தம் மறைமாவட்டத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் தம்முடையதாக்கி - எல்லாப் பிரச்சினைகளுக்கும் தம் மண்டையை உடைத்து - எல்லேரர் துன்பங்களையும் தம் துன்பமாக்கி - எல்லேரர் குற்றங்களையும் தாமே செய்தவர் போலாகி - எல்லோர் குற்றச்சாட்டுக்களையும் தாமே தாங்கிக் கொண்டு - எல்லோர் பேச்சுக்களையும் தாமே கேட்டுக் கொண்டு - எல்லாப் பொறுப்புக்களையும் கூட்டாக ஏற்றுக்கொண்டு - எல்லோருக்கும் எல்லாமுமானேன் (1கொரிந்தியர் 9:22) என்ற நிலையையே பெறுகின்றனர்.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பணிசிறக்க வாழ்த்துக்களையும் இறையாசீரையும் வேண்டி நிற்கிறோம்.

ஸமரியன்னை வழி இயேசுவிடம்'- என்ற விருதுவாக்குடன் தம் பணியை ஆரம்பித்த யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நிறையவே விதைத்துள்ளார். தொடர்ந்தும் விதைத்துக் கொண்டே இருக் கிறார். அவரது விதைப்பின் அறுவடைய அனுபவிக்க இன்னும் சில காலம் தேவை.

## யாழ் ஆயரின் 4 ஆம் ஆண்டு பங்களிப்புகளின் சிறப்புக்கள்

ஆயர் அவர்கள் மறைமாவட்டத்தின் வளர்ச்சியே முன்னுரிமை என்ற அடிப்படையில் அர்ப்பணத்தோடு பணியாற்றி வருவதை அவரது அனைத்துப் பணிகளும் வெளப்படுத்தி நிற்கின்றன. ஆன்மீகப்பணி, மறைக்கல்விப் பணி, கல்விப்பணி, இளைஞர்களின் தொழில் வாய்ப்பு எனப் பணிகள் விரிவடைந்து செல்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

மக்கள் இறைவனோடு உறவாடும் இல்லமாக ஆலயங்கள் திகழ்கின்றன என்பதை கருத்தில் கொண்டு இதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார். அந்த வகையில் கட்டி முடிக்கப்பட்ட மற்றும்கட்டப்பட்டுக்கொண்டிருக்கும்புதியஆலயங்கள் மற்றும் முகப்பு வேலைகள் பல.

அளம்பில் புனித அந்தோனியர் திருத்தலம், முல்லைத்தீவுப் பங்கில், முல்லைத்தீவுக் கப்பலேந்தி மாதா, பழைய வைத்தியசாலைச் சிற்றாலயம், உடுப்புக்குளம் குழந்தை இயேசு(இது சென்றவருடம் முடிக்கப்பட்டது). இரணைப்பாலைப் பங்கின் ஆனந்தபுரத்தில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் ஆயரால் நாட்டப்பட்டு ஆசீர்வதிக்கப் பட்டுள்ளது. கூழாமுறிப்புப் பங்கின் புனித சூசையப்பர், பூதன் வயலில் கார்மேல் அன்னை. முத்தையன்கட்டு புனித சூசையப்பர், தண்ணியூற்றுப் புனித அந்தோனியார், ஒட்டுசுட்டான் கிறிஸ்து அரசர், மாஞ்சோலை வைத்தியசாலைச் சிற்றாலயம், அக்கராயன் குளம் பங்கின் மணியன்குளத்தில் புனித குழந்தை இயேசு. கிளிநொச்சிபங்கில் திரேசம்மாள் ஆலய போட்டிக்கா, மற்றும் அம்பாள் குளத்தில் சதாசகாய அன்னை. பளைப்பங்கிலுள்ள முகமாலை அன்னை வேளாங்கண்ணி. பண்டத்தரிப்புப் பங்கில் பண்டத்தரிப்பு செபமாலை மாதா மற்றும் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார். சில்லாலைப் பங்கில் வைத்தியசாலைச் சிற்றாலயம், குருநகர் பங்கில் கொலைவிலக்கி மாதா. அனலைதீவில் ஆரோக்கிய அன்னை. தர்மபுரப்பங்கின் கல்லாறில் குழந்தை இயேசுஆலயப்புனரமைப்பு, மணல்காடு பங்கு புனித அந்தோனியார் கோயில் முகப்பு மற்றும் புதிய கோயில் கட்டுவதற்கான ஆயத்தங்களும். கோப்பாய்ப் பங்கு புனித சூசையப்பர் ஆயலம் மற்றும் செபமாலை அன்னை ஆலய முகப்பு வேலை. பருத்தித்துறைப் பங்கில் தும்பளை புனித மரியன்னை ஆலயம். உருத்திரபுரம் பங்கில், பத்திமா கோயில் போட்டிக்கோ, ஜெயந்திநகர் யூதாததேயு ஆலய போட்டிக்கோ புனித ஆந்தோனியார் ஆலய போட்டிக்கோ என்பன தொடர்கின்றன.

கிளிநொச்சி அன்னை திரேசா ஆலய வளாகத்தில் மறையாசிரியர்களுக்கான மண்டபம் அத்திவாரம் இடப்பட்டுள்ளது. பண்டத்தரிப்புப் பங்கில் பற்றிமா அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி வகுப்பிற்கான மண்டபம் கட்டப்பட்டுள்ளது. புதிய மறைக்கல்வி நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கும் ஆயர் திட்டமிட்டு வருகின்றார்.

இரணப்பாலையில் அன்புச் சகோதரிகளுக்கான புதிய மடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சபைச் சகோதரிகளால் சில்லாலையில் முதியோருக்கான தனியார் இல்லம் பராமரிக்கப்படுகின்றது. மண்டைதீவுப் பங்கில் சல்வற்றோறியன்சபைச் சகோதரிகள் தங்கியிருந்து பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கான மடம் கட்டப்படுகின்றது. பாசையூரில், திருக்குடும்பக்கன்னியர் சபையின் யூலாலி இல்லம் ஆயரால் திறந்து வைக்கப்பட்டது. தாளையடியில் 15 ஆண்டுகளின் பின்னர் கார்மேல் சபை அருள்சகோதரிகளின் இல்லம் கட்டப்பட்டு மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருச்சிலுவைக் கன்னியர் சபை வைத்தியாசாலை பரந்தனில் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாரந்தனைப் பங்கிற்கு அருள்சகோதரிகளை வரவழைத்து அங்கும் ஆன்மீகப் பணியை விரிவுபடுத்தும் முயற்சிகளை ஆயர் அவர்கள் ஆரம்பித்துள்ளார்.

1. அரசியல்வாதிகள் ஆயரைச் சந்திக்க வருகின்றபோது இளைஞர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கவனம்செலுத்துமாறு அவர்களிடம்வேண்டுகோள் விடுத்து வருகின்றார்.

2. ஆயரின் முயற்சியால், யாழ் சம்பத்தாரிசியர் கல்லூரியில் புதிதாக கார்டினர் கட்டடத்தொகுதி உருவாக்கப்பட்டு, அண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

3.அல்லைப்பிட்டியில் மொன்போட் சபை அருள் சகோதரர்கள் சர்வதேச பாடசாலைக்கான கட்டடவேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அவர்களது பணிக்கு ஆதரவாக, zÓM சபை அருள் சகோதரிகள் ஆரம்பக்கல்வியை கவனிப்பதற்காக வருகை தந்துள்ளனர்.

4. தாளையடிப் பங்கில் அருள்சகோதரி ஒருவர் பாடசாலை அதிபரக நியமிக்கப்பட்டுள்ளமையால் மாணவர்களின்உருவாக்கம்வளர்ச்சிகாண்கின்றது.

5. யாழ் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்த நாகரீகத்துறையின் முதலாவது சர்வதேசமாநாடு ஆயரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

6. அறிவியல் நகரில் பல்கலைக் கழக மாணவர்களுக்கான ஆன்மீகப் பணியகத்திற்கான காணியைப் பெற்றுள்ளதோடு, அங்கு அதற்கான பணிமனை கட்டும் பணியையும் திட்டமிட்டுவருகின்றார்.

7. அகவொளி நிறுவனத்தில் உளவியல் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் விஞ்ஞானமாணிப் படிப்பை மேற்கொள்வதற்கான முன்னாயத்தமாக ஆயரின் பங்களிப்போடு நூலகம் விருத்தி செய்தல் இடம்பெற்று வருகின்றது.

8. அல்லைப்பிட்டியில் புனித பிலிப்பு நோயார் சிறார்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக ஒரு முன்பள்ளி கட்டிமுடிக்கப்பட்டது

**ஆயரின் பணிகள் இன்னும் சிறக்க இறையாசீர் வேண்டுவோம்.**

அருள்திரு இராசேந்திரம் இஸ்ரலின்

# மர்மம் விலகாத இந்திய கோவில்கள்!



இந்தியாவில் உள்ள கோவில்களில், 5 கோவில்கள் இன்னும் மர்மங்கள் நிறைந்தனதாகவே உள்ளன. இன்றுவரை அந்த மர்மங்களுக்கு விடை கிடைக்கவில்லை. தஞ்சை பெரிய கோவில், பெங்களூரு காடு மல்லேஸ்வரர் கோவில், கேரளா பத்மநாத சுவாமி கோவில், குஜராத் ஸ்ரீ ஸ்தம்பேஸ்வரர் கோவில் மற்றும் ஆந்திராவில் உள்ள லேபாக்ஷி கோவில். இந்த கோவில்களின் மர்மங்கள் இன்று வரை புதிராகவே இருந்து வருகின்றன.

இந்தியா ஓர் ஆன்மீக நாடு என்பது மத நம்பிக்கை உள்ள அனைவருக்கும் தெரியும். இந்து மதத்தை பரப்புவதற்காக எத்தனையோ மகான்களும் ஆன்மீகப் பெரியோர்களும் இந்த பூமியில் அவதரித்துள்ளனர். அதே போல் அன்றைய காலத்தில், காலத்தால் அழியாத எத்தனையோ ஆலயங்களையும் கட்டி எழுப்பி இந்து மதத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அந்தக் காலத்தில் கட்டப்பட்ட மிகப் பிரமாண்டமான கோவில்களைப் போல் இன்றைய காலத்தில் கட்ட முடியாமல் போனது ஆச்சரியமாகவே உள்ளது. காரணம், எந்தவிதமான தொழில்நுட்பமும் இல்லாத 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் எப்படி இந்த மாதிரியான அதிசயிக்கத்தக்க வகையில் மிகப் பிரமாண்ட கோவில்களை கட்டி எழுப்பியுள்ளனர் என்பது இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்கே சவாலான ஆச்சரியமான உள்ளது என்று சொல்லலாம்.

### இந்தியாவின் பிரம்மாண்டம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எத்தனையோ வெளிநாட்டு மன்னர்களும், கொள்ளையர்களும், இந்தியர்களைப் பற்றியும், இங்குள்ள கோவில்களைப் பற்றியும் செவிவழிச் செய்தியாக கேள்விப்பட்டு, இந்தியாவின் மீது தொடர்ந்து படையெடுத்து வந்து இங்கிருந்த கோவில்களை பார்த்து ஆச்சரியப்பட்டு, கோவில்களில் இருந்த செல்வங்களை கொள்ளையடித்தமையோடு, கோவில்களையும் இடித்துத் தரைமட்டமாக்கி துவம்சம் செய்து விட்டு சென்றதுண்டு.

### கொள்ளை போன கோவில் சொத்து

அதிலும் குறிப்பாக முகமது கஜினி, தொடர்ந்து 18 முறை இந்தியாவின் மீது படையெடுத்து வந்து இங்கிருந்த செல்வங்களை எல்லாம் கொள்ளையடித்து சென்றான். 18ஆவது முறையாக இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, அவன் குறிவைத்தது ஒரே ஒரு கோவிலைத் தான். அதுதான் குஜராத்தின் புகழ்பெற்ற சோமநாதர் கோவிலைத் தான். சோமநாதர் கோவில் சோமநாதர் கோவிலைப் பற்றிய ஆச்சரியங்கள் உலகம் முழுவதும் தெரிந்திருந்தது. அதன் காரணமாகவே 18 ஆவது முறை கஜினி



முகமது இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது அவன் குறிவைத்தது புகழ்பெற்ற சோமநாதர் ஆலயத்தைதான். அது ஏன் அந்த கோவிலின் மீது குறிவைத்தான் என்பது தானே உங்கள் கேள்வி.

அன்றைய காலத்தில் இந்தியாவில் இருந்த கோவில்களில் மிகவும் பணக்கார கோவில் அது தான். ஒரே வரியில் சொல்வதென்றால், அவன் சோமநாதர் கோவிலில் இருந்து கொள்ளையடித்த தங்கத்தின் எடை மட்டும் 6 தொன்னுக்கும் அதிகம். அதோடு, அந்த கோவிலில் இருந்த செல்வ வளத்தை தாண்டி இரண்டு ஆச்சரிய அதிசயங்கள் இருந்தன. புரியாத சோமநாதர் கோவில் கடற்கரையை ஒட்டிய கோவில் என்பதால், தினசரி காலையும் மாலையும் ஒரு பெரிய கடல் அலை ஒன்று எழும்பி சோமநாதர் கோவில் படிக்கட்டுகளை முத்தமிட்டு திரும்பும் என்பது தான். இன்றைய கட்டடக்கலை வல்லுநர்களுக்கு இது புரியாத புதிர் தான்.

மற்றொரு ஆச்சரியம் அந்த கோவிலில் கருவறை லிங்கம். மற்ற கோவில்களில் இல்லாத அதிசயம் சோமநாதர் கோவில் லிங்கத்திற்கு இருந்தது. அந்த கோவில் கருவறை லிங்கம் மற்ற கோவில்களில் இருப்பதைப் போல் தரையில் அமைந்திருக்கவில்லை.

அதற்கு மாறாக எந்தவிதமான பிடிமானமும் இல்லாமல் அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து ஒரு கணம் கஜினி முகமது ஆச்சரியப்பட்டான் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். சோமநாதர் கோவிலைப் போலவே இந்தியாவில் எத்தனையோ கோவில்களில் மர்மங்கள் நிறைந்துள்ளன. அவற்றுக்கு இன்று வரையிலும் அறிவியல் ரீதியாகப் பதில் கிடைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். இதில் ஐந்து கோவில்கள் மர்மங்களும் அதிசயங்களும் நிறைந்தனவாகவே இருக்கின்றன.

தஞ்சை பெரிய கோவில் இதில் முதலாவதாக வருவது, இது 1007ஆம் ஆண்டுகளில் ராஜ ராஜ சோழமன்னனால் கட்டப்பட்டது. இந்திய கட்டடக்கலைக்க பெயர் பெற்ற கோவில் என் பதோடு யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னங்களின் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோவில் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் அனைத்துமே சுத்தமான கிரானைட் கற்களாகும். கோவில் விமானமும் 80 டன் எடையுள்ள ஒரே கிரானைட் கல்லால் ஆனது.

### விலகாத மர்மம்

இதில் ஆச்சரியம் என்னவென்றால், இந்த கோவிலைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 60 கி.மீக்கு எந்த மலையோ அல்லது குன்றுகளோ கிடையாது. அப்படி இருக்கையில் எப்படி முழுக்க பெரிய பெரிய கிரானைட் கற்களைக் கொண்டு இந்த கோவில் கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் மண்டையைக் குழப்புகின்றார்கள். இன்று வரையிலும் அதற்கான மர்மம் விலகவில்லை.

### குஜராத் கடல் கோவில்

அடுத்ததாக வருவது குஜராத் மாநிலத்தில் பரூச் மாவட்டத்தில் கவி – கம்போய் என்ற சிற்றூரில் அரபிக்கடலில் கட்டப்பட்ட ஸ்ரீ ஸ்தம்பேஸ்வரர் கோவில். இதற்கு தினமும் மறையும் கோவில் என்றும் பெயருண்டு. இப்படி ஒரு கோவில் இருப்பதே 150 ஆண்டுகளுக்கு முன்புதான் வெளியுலகிற்கு தெரிய வந்தது. 150 ஆண்டுகளுக்கு முன்பு கடல் உள்வோங்கும்போது தான் இக்கோவில் இருப்பது தெரியவந்தது. இந்தக் கோவிலின் அதிசயம் என்னவென்றால், காலை வேளைகளில் முழுமையாக காட்சியளிக்கும். பின்பு மாலை முதல் இரவு வரையிலும் கடல் அலைகளால் கோவில் முழுவதுமாக மூழ்கடிக்கப்படும். அந்த அளவுக்கு கனகச்சிதமாக இந்த கோவிலை கட்டி முடித்துள்ளனர். இதை கட்டியது யார், எந்த ஆண்டு என்பது இன்றுவரையிலும் மர்மமாகவே உள்ளது.

### திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில்

அடுத்ததாக நாம் காணவிருப்பது, கேரளா மாநில தலைநகரான திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள பத்மநாப சுவாமி கோவில். இந்த கோவிலைப் பற்றிய மர்மமும் இன்று வரை தொடர்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, உச்ச நீதிமன்ற உத்தரவின்



பேரில் 6 ரகசிய நிலவறைகள் திறந்து பார்க்கப்பட்டன. திறந்து பார்த்த உடனேயே அனைவரும் ஆச்சரியத்தில் வாய் பிளந்து நின்றுவிட்டனர். அந்த அறைகளில் இருந் தவை அனைத்துமே தங்க வைர, வைடூரிய ஆபரணங்கள் தான். அவற்றின் இன்றைய மதிப்பு கிட்டத்தட்ட 5 லட்சம் கோடி ரூபா ஆகும். திருப்பதி கோவிலின் சொத்து மதிப்பெல்லாம் பின்னுக்கு தள்ளப்பட்டுவிட்டது என்று சொல்லலாம். கடைசியாக உள்ள 7ஆவது அறை மட்டும் இன்னும் திறக்கப்படவில்லை. பொக்கிஷக் குவியல் நிறைந்த அந்த அறை முழுவதும் கடினமான எ ஃகு இரும்பால் செய்யப்பட்டுள்ளது. அந்த கதவில் என்ன தான் தீவிரமாக ஆராய்ந்து பார்த்தாலும் கூட சிறு துளையைக் கூடக் காண முடியவில்லை. இந்த நில வறையில் உள்ள



சொத்துக்கள், இது வரை கண்டெடுக்கப்பட்ட சொத்து மதிப்பை காட்டிலும் 4 மடங்கு இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. அதோடு இந்த அறையின் கதவை இரகசிய மந்திரத்தால் மட்டுமே திறக்க முடியும் என்றும் நம்பப்படுகிறது. ஆனால் மற்றொரு தரப்பினரோ, இந்த அறையில் தான் உலகம் அழியும் நாள் பற்றிய இரகசிய குறிப்பு உள்ளது என்றும் நம்புகின்றனர். இதனாலேயே இந்த கோவிலைப் பற்றிய மர்மம் இன்றும் தொடர்கிறது.

### ஆந்திரா லேபாஷி கோவில்

மற்றொரு அதிசயமான கோவில், ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள அமைந்துள்ளது லேபாக்ஷி கோவில். சிவன், விஷ்ணு மற்றும் வீரபத்திரர் ஆகிய மூவருக்கும் ஒரே கோவிலாக அமைந்துள்ளது. இந்த கோவில் சிற்பக்கலைக்கு புகழ் பெற்ற கோவிலாகும். இந்த கோவிலின் அமைக்கப்பட்டுள்ள 70 தூண்களில் ஒரு தூண் மட்டும் தரையைத் தொடாமல் அந்தரத்தில் தொங்கும் படி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மர்மமும் விலகாமலேயே இருந்து வருகிறது. காடு மல்லேஸ்வரா கோவில்

கடைசியாக நாம் காண்பது, கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூருவின் வடமேற்கு பகுதியில் அமைந்ததுள்ள காடு மல்லேஸ்வரர் கோவில். இந்த கோவில் இருப்பதே 1997ஆம் ஆண்டுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கோவில் இருந்த நிலத்திற்கு அருகில் கட்டுமானத்திற்கு குழி தோண்டும்போது தான் கண்டுபிடிக்கப்பட்டது. முழுவதுமாக தோண்டிய போதுதான், பெரிய அளவிலான கோபுரத்தோடு, குளத்துடன் கூடிய கோவில் இருப்பது தெரிய வந்தது.

### சிவனுக்கு நந்தி அபிஷேகம்

இந்த கோவிலில் நந்தியானது வழக்கமாக இருப்பதைப் போல் இல்லாமல், சிவலிங்கத்திற்கு முன்புறம் இல்லாமல், லிங்கத்திற்கு முன்புறம் சற்று மேற்புறத்தில் அமைந்துள்ளது. அதோடு, நந்தியின் வாயிலிருந்து எப்போதும் நீர் விழுந்து கொண்டிருக்கிறது. அந்த நீரானது நேராக சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வது போல் அமைந்துள்ளது. இந்த அதிசய காட்சியை பார்க்கவே தினந்தோறும் பக்தர்கள் படையெடுக்கின்றனர். லிங்கத்தின் மீது விழும் நீர் நேராக குளத்தில் சென்று கலக்கிறது. ஆனால் நந்தியின் வாயிலிருந்து விழும் நீர் எங்கிருந்து வருகிறது என்பது மர்மமாகவே இருந்து வருகிறது.

# இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட்: விலகினார் பந்துவீச்சாளர் ஹசன் அலி




இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்து, பாகிஸ்தானின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஹசன் அலி விலகியுள்ளார்.

விலா எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளதால், அவர் எதிர்வரும் இலங்கை அணிக்கெதிரான தொடரிலிருந்து விலகியுள்ளார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விளக்கம் அளித்துள்ளது.

தற்போது ஹசன் அலியின் மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர், அவரின் காயம் குணமடைய ஆறு வாரங்கள் ஆகும் என மருத்துவக் குழு தெரிவித்துள்ளது.

எனினும், ஹசன் அலிக்கு மாற்றுவீரர் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. தற்போது நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியா அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கு பிறகு, இலங்கை அணிக்கெதிரான தொடரில் விளையாடும் பாகிஸ்தான் அணி விவரம் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு தீவிரவாதத் தாக்குதலுக்கு பிறகு, இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, டிசெம்பர் 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி, டிசெம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# சந்திமாலுக்கு வாய்ப்பு

பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் எதிர்பார்ப்பு மிக்க இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் முன்னாள் தலைவரான தினேஷ் சந்திமால், அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார். அவர் இறுதியாக இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற ஆஸ்தி ரேலியா அணிக்கெதிரான தொடரில் விளையாடி இருந்தார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் தினேஷ் சந்திமாலின் பெயர் இடம்பெற்றிருந்தாலும், அவருக்கு விளையாடுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

வேகப்பந்து வீச்சாளரான கசுன் ராஜிதவுக்கு மீண்டும் அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஐ.சி.சி. விதிமுறைக்கு மாறாக பந்துவீசுவதாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த செப்ரெம்பர் மாதம் ஓராண்டு தடை விதிக்கப்பட்ட சுழற்பந்து வீச்சாளர் அகில தனஞ்சயவுக்கு பதிலாக, லசித் எம்புல்தெனியவுக்கு அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதுதவிர, அனுபவமிக்க சுழற்பந்துவீச்சாளரானதில்ருவான்பெரேரா அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

திமுத் கருணாரத்ன தலைமையிலான அணியில், ஒஷேத பெனார்டோ, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், குசல் பெரேரா, லஹிரு திரிமன்னே, தனஞ்சய டி சில்வா, நிரோஷன் டிக்வெல்ல, தில்ருவான் பெரேரா, லசித் எம்புல்தெனிய, சுரங்க லக்மால், லஹிரு குமார, விஷ்வ பெனார்டோ, கசுன் ராஜித, லக்ஷான் சந்தகான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நீண்டதொரு சர்ச்சைக்கு பிறகு பாகிஸ்தானுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டித் தொடரில் விளையாடுவதற்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணி, தற்போது மீண்டும் அங்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதன்படி சுமார் 10 வருடங்களுக்கு பிறகு பாகிஸ்தான் மண்ணுக்கு சென்று இலங்கை கிரிக்கெட் அணி, டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, டிசெம்பர் 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி, டிசம்பர் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கராச்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் ஒருநாள் மற்றும் ரி -20 தொடரில் விளையாடுவதற்காக முன்னணி வீரர்கள் இல்லாத இலங்கை அணி பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டது.



இதில் முதலில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி, 2 – 0 என கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை இலங்கை அணி, முழுமையாக கைப்பற்றியது.

தற்போது நீண்டதொரு பேச்சுக்கு பின்னர், மட்டுப்படுத்தப்பட்ட தொடர்களில் இடம்பெறாத முன்னணி வீரர்களுடன், இலங்கை அணி பாகிஸ்தான் சென்று விளையாடவுள்ளது.



# டிம் முர்டாக் ஓய்வு

அயர்லாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான டிம் முர்டாக், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெற்றுள்ளார்.

தனது வயது மற்றும் உடற்தகுதி ஆகிய காரணங்களை முன்னிறுத்தியே அவர், இந்த ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

எனினும், அவர் உள்ளூர் மற்றும் முதற்தர போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடுவார் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதனை நிரூபிக்கும் வகையில், மிடில் செக்ஸ் அணியுடன் இரண்டு ஆண்டு ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டுள்ளார். 2021ஆம் ஆண்டு சீசனின் இறுதி வரை அந்த அணிக்காக விளையாடவுள்ளார்.

அயர்லாந்து கிரிக்கெட் அணியின் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக பார்க்கப்படும் டிம் முர்டாக், இறுதியாக லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க டெஸ்ட் போட்டியில், முதல் இன்னிங்ஸில் 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் 52 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

38 வயதான டிம் முர்டாக், இதுவரை மூன்று டெஸ்ட் போட்டிகளில் 13 விக்கெட்டுகளையும், 58 ஒருநாள் போட்டிகளில் 74 விக்கெட்டுகளையும், 14 ரி – 20 போட்டிகளில் விளையாடி 13 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தனது முதல் முச்சதத்தை பதிவு செய்தார் வோர்னர்



ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்னர், டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது முதலாவது முச்சதத்தைப் பதிவு செய்துள்ளார்.

அடிலெய்ட் மைதானத்தில் தற்போது பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடைபெற்றுவரும் பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலேயே, இந்த முச்சதத்தை அவர் பதிவு செய்துள்ளார்.

இப்போட்டியில், 389 பந்துகளை எதிர்கொண்ட அவர் 37 பவுண்டரிகள் அடங்களாக முச்சதத்தைப் பூர்த்தி செய்தார். தற்போது தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கிறார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir





# நீரிழிவு நோயாளிகள் ஆரோக்கியமாக இருக்க...

சர்க்கரை நோயாளி ஆரோக்கியமாக இருக்க மனதில் வைத்திருக்க வேண்டிய 5 விடயங்கள் இவை –

நீரிழிவு என்பது ஓர் உலகளாவிய சுகாதார பிரச்சினை ஆகும். மற்றும் இதன் சரியான பராமரிப்பு மற்றும் நிர்வாகத்திற்காக பரந்த அளவில் கவனம் செலுத்த வேண்டும். நீரிழிவு நோயாளி பின்பற்ற வேண்டிய சில அத்தியாவசிய குறிப்புகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:–

### டயட் முக்கியமானது

நீரிழிவு நோயாளி மனதில் கொள்ள வேண்டிய முதல் விடயம் ஆரோக்கியமான உணவைப் பின்பற்றுவது. இது முழு தானியங்கள், பருப்பு வகைகள், கொட்டைகள் மற்றும் குறைந்த கொழுப்புள்ள பால் பொருள்கள் நிறைந்த உணவை உள்ளடக்கும். மறுபுறம், உணவில் சர்க்கரை மற்றும் மைதா மற்றும் மெருகூட்டப்பட்ட அரிசி போன்ற சுத்திகரிக்கப்பட்ட கார்போஹைட்ரேட்டுகள் குறைவாக இருக்க வேண்டும். நெய் மற்றும் வெண்ணெய் போன்ற நிறைவுற்ற கொழுப்பையும், அதிகமாக வறுத்த உணவுகளில் உருவாகும் டிரான்ஸ் கொழுப்பையும் தவிர்க்க வேண்டும். ஒருவர் அசைவ உணவை உண்பவர் என்றால், மெலிந்த இறைச்சி, மீன் மற்றும் முட்டையின் வெள்ளைக் கரு போன்றவற்றை உண்ணலாம்.

### உடற்பயிற்சி தான் முக்கியம்

நீரிழிவு நோயாளி மனதில் கொள்ள வேண்டிய இரண்டாவது விடயம், தவறாமல் உடற்பயிற்சி செய்வது. நடைபயிற்சி, ஜொக்கிங், டிரெட்மில் அல்லது நீச்சல் போன்ற ஏரோபிக் பயிற்சிகள் மூலம் கலோரிகள்/சர்க்கரையை எரிக்கலாம். அதே நேரத்தில், தசை வலிமையைப் பராமரிக்க இலகுரக பயிற்சிகள் செய்யப்பட வேண்டும். யோகா அல்லது தியானமும் அட்டவணையில் இணைக்கப்பட வேண்டும், ஏனெனில் இது மன அழுத்தத்தைக் குறைக்கும் மற்றும் நெகிழ்வுத்தன்மையை ஊக்குவிக்கும். தவறாமல் செய்யப்படும் உடற்பயிற்சி மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பராமரிக்கிறது மற்றும் இதயத்தைப் பாதுகாக்கிறது.



### மருந்துகளைத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்

மூன்றாவது விடயம் தவறாமல் மருந்துகளை உட்கொள்வது. மருத்துவர் பரிந்துரைத்தபடி மருந்துகள் சரியான நேரத்தில் எடுக்கப்பட வேண்டும். வாய்வழி மாத்திரைகள் அல்லது இன்சுலின் எதுவாக இருந்தாலும், உணவோடு அவற்றை எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியம். மேலும், இன்சுலின் ஊசி ஏறக்குறைய வலியற்றது மற்றும் சார்பு நிலையை ஊக்குவிக்காததால் இன்சுலின் (தேவைப்பட்டால்) தொடங்குவதில் ஒருவர் தாமதிக்கக்கூடாது. நிலைமையைப் பொறுத்து, இன்சுலின் குறுகிய காலத்திற்கு பரிந்துரைக்கப்படலாம், இரத்த சர்க்கரைகளை தினசரி கட்டுப்படுத்த வேண்டிய போது இன்சுலின் தொடங்குவதில் தாமதம் ஏற்படுவதால் மாற்ற முடியாத சிறுநீரகம், நரம்பு அல்லது கண் பாதிப்பு போன்ற சிக்கல்கள் ஏற்படலாம்.

### மருத்துவரிடம் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

நான்காவது விடயம் என்னவென்றால், குறைந்தது மூன்று மாத இடைவெளியில் மருத்துவரை தவறாமல் பார்ப்பது. நீரிழிவு தொடர்பான பல்வேறு சிக்கல்கள் மற்றும் ஒரே நேரத்தில் ஏற்படும் நோய்களுக்கு ஒரு நபர் மருத்துவர் கண்காணிப்பில் இருக்க வேண்டும். சிறுநீரகம், விழித்திரை மற்றும் நரம்பு செயல்பாட்டை ஆண்டுக்கு ஒரு முறை சோதிக்க வேண்டும். சிறுநீரகம், விழித்திரை மற்றும் நரம்பு தொடர்பான சிக்கல்கள் சிறிய இரத்த நாளங்கள் (மைக்ரோவாஸ்குலர்) சிக்கல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இதேபோல், இதயத்தை சோதிக்க ஒரு ஈ.சி.ஜி வருடத்திற்கு ஒரு முறை செய்யப்படலாம், இது ஒரு பெரிய இரத்த நாளம் (மேக்ரோவாஸ்குலர்) சிக்கலாகும்.


உயர் இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பு போன்ற இணக்க நோய்களையும் கண்காணிக்க வேண்டும், ஏனெனில் இவை தனித்தனியாக இதய நோய் அபாயத்தை அதிகரிக்கின்றன. மருத்துவர் சிகிச்சைக்கு மேலதிகமாக, ஒரு நீரிழிவு நோயாளி ஒவ்வொரு நாளும் தனது கால்களைத் தானாகவே பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இந்த முறையில், பாதப் பிரச்சினைகள் தடுக்கக்கூடியவை.




### எண்களைச் சரிபார்க்கவும்

உங்கள் எண்களை அறிந்து கொள்ளுங்கள். HBA1c என்பது கிளைகோசைலேட்டட் ஹீமோகுளோபினின் சுருக்கமாகும். HBA1c என்பது கடந்த மூன்று மாதங்களில் சராசரி இரத்த குளுக்கோஸின் அளவீடு ஆகும். HBA1c அதிகமாகும் போது, சராசரி இரத்த குளுக்கோஸ் அதிகப்படுத்துகிறது மற்றும் சிக்கல்களின் ஆபத்து அதிகமாகிறது. எனவே உங்கள் HBA1c அளவை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும், மேலும் சிக்கல்களின் அபாயத்தைக் குறைக்க அதை 7% வரை வைத்திருக்க முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் நீங்கள் HBA1c ஐ சரிபார்க்க வேண்டும்.

உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பையும் சரிபார்க்க வேண்டும். நீங்கள் அவற்றின் அளவை அறிந்து, பிபி 130/80 க்கும் குறைவாகவும், 100 மி.கி / டி.எல் – க்கும் குறைவான கெட்ட கொழுப்பு (எல்.டி.எல் கொழுப்பு) ஐ பராமரிக்க வேண்டும். தனது நோயைப் பற்றி அதிகம் அறிந்த நீரிழிவு நோயாளி நீண்ட காலம் வாழ்கிறார்.




# நீரிழிவு நோயாளிகளும் இரத்ததானம் செய்யலாம்

### சர்க்கரை நோயாளிகள் இரத்த தானம் செய்யலாமா?

இரத்த தானம் செய்வது என்பது ஒரு தன்னலமற்ற செயலாகும். ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு விநாடியும் எங்கோ ஒருவருக்கு இரத்தம் தேவைப்படுகிறது.

இருப்பினும் நீரிழிவு நோயாளிகள் இரத்த தானம் செய்யக் கூடாது என்ற தவறான கருத்து நிலவி வருகிறது. ஆனால் நீரிழிவு நோயாளிகள் கூட இரத்த தானம் செய்ய முடியும். அதற்கு அவர்கள் சில பாதுகாப்புக் காரணிகளை கருத்தில் கொண்டு செயல்பட்டாலே போதும். அதைப் பற்றி இக்கட்டுரையில் நாம் காண்போம்.

### நீரிழிவு நோயாளிகள் இரத்த தானம் செய்வது பாதுகாப்பானதா?

நீரிழிவு நோயாளிகள் இரத்த தானம் செய்வது பாதுகாப்பானது தான். டைப் 1 மற்றும் டைப் 2 நீரிழிவு உள்ளவர்கள் தாராளமாக இரத்த தானம் செய்யலாம். நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, ஆரோக்கியமான உணவைப் பின்பற்றி, உடற்பயிற்சி செய்து வந்தாலே, உங்கள் இரத்த சர்க்கரை அளவை பராமரிக்க முடியும்.



இரத்த தானம் செய்வதற்கு முன் உறுதி செய்ய வேண்டிய விடயங்கள்:–

நீங்கள் இரத்த தானம் செய்வதற்கு முன் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். நீங்கள் நீரிழிவு மருந்துகளை எடுத்துக் கொண்டு இருக்கலாம். அது உங்கள் இரத்தத்தில் கலந்துள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

இரத்த தானம் செய்வதற்கு முன் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்:

நீரிழிவு நோய் இருப்பவர்கள் இதய நோய்கள் எதாவது இருக்கிறதா என்பதை பரிசோதனை செய்து கொண்ட பிறகு இரத்த தானம் செய்யலாம் டைப் 1 மற்றும் டைப் 2 நீரிழிவுநோயாளிகள் இன்சுலினை உள் வழியாக எடுத்துக் கொண்டு இருந்தால், அவர்கள் இரத்த தானம் செய்யக் கூடாது. நீரிழிவு மருந்துகள் எடுத்துக்கொள்ளும் நபர்கள் இரத்தம் கொடுக்க விரும்பினால் நான்கு வாரங்களுக்கு மருந்து எதையும் மாற்றக் கூடாது. உங்கள் மருந்துகள் மாறி விட்டால், அது உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவைப் பாதிக்கும். இதனால் உடல்நிலை ஆபத்தில் இருக்க நேரிடும்.

### இதய பிரச்சினைகள்

இதய பிரச்சினைகள் இருப்பவர்கள் இரத்த தானம் கொடுக்க அனுமதி இல்லை. சர்க்கரை நோயாளிகளுக்கு இதயம் தொடர்பான பிரச்சினைகள் இருந்தாலும், இதய செயலிழப்பு, இரத்தகுழாய் அடைப்புகள் இருந்தால், அவர்கள் இரத்த தானம் செய்ய அனுமதியில்லை.

### இரத்த தானம் செய்யும் முன்...

இரத்த தான மையங்களில் ஒரு ஸ்கிரீனிங் செயல்முறை உள்ளது. எனவே உங்கள் உடல்நிலை குறித்து முன்னரே அவர்களிடம் கூறிவிடுங்கள். நீங்கள் எடுத்துக் கொள்ளும் மருந்துகள் முதற்கொண்டு சொல்லி விடுங்கள். அதே நேரத்தில் நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். உங்கள் உடல் எடையையும் சராசரியாக பராமரிக்க வேண்டும்.

### இரத்த தானத்திற்கு பிறகு செய்ய வேண்டியவை...

நீங்கள் இரத்த தானம் செய்த பிறகு, உங்கள் இரத்த சர்க்கரை அளவைக் கண்காணித்து, இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை 24 வாரங்களுக்குச் சாப்பிடுங்கள். இது உங்கள் இரத்த உற்பத்திக்கு உதவும். இரத்தம் தானம் செய்த பிறகு கைகளில் புண்கள் இருந்தால் அசிடமினோபன் எடுத்துக் கொள்ளுங்கள். சிராய்ப்பு, தொற்று ஏற்படுவதை தடுக்கக் குறைந்தது நான்கு மணி நேரம் உங்கள் கட்டுகளை வைத்திருங்கள். இரத்த தானம் செய்த பிறகு 24 மணி நேரம் எந்தவித கடுமையான செயல்களையும் செய்ய வேண்டாம். இரத்த தானம் செய்த பிறகு திரவ உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் புதிய இரத்த உற்பத்திக்கு உதவியாக இருக்கும்.




உங்கள் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் நீங்கள் தாராளமாக இரத்த தானம் செய்யலாம். 56 நாள்களுக்கு ஒரு முறை இரத்த தானமும், 7 நாள்களுக்கு ஒரு முறை பிளேட்லெட் தானமும் நீங்கள் செய்து வரலாம். இதனுடன் ஆரோக்கியமான வாழ்க்கை முறை, உணவுப்பழக்கம், உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வாழ வைக்கும் என்பதை மறக்காதீர்கள்.

காலைக்கதிர் Kalaikathir



# வேண்டவே வேண்டாம் செயற்கை நகப்பூச்சுகள்!



**நெய்ல் பொலிஷ் பயன்படுத்துபவரா நீங்கள்? உங்களுக்கு காத்திருக்கும் ஆபத்து!**

உலகமயமாதலுக்கு பிறகு குறிப்பாக எல்லாரும் அழகு, ஆடைகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். செயற்கையான இரசாயனம் பொருந்திய முக அழகு க்ரீம்கள், தலை முடிக்கு ரம்பு, நகத்திற்கு நெயில் பொலிஷ் என்று கெமிக்கல் கலந்த பொருள்களை அழகு என்று கருதி நாம் செய்து கொண்டிருக்கிறோம். இதனால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பக்க விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இரசாயனம் கலந்த பொருள்களை நம் மிருதுவான உடலுக்கு பயன்படுத்துகிறோம்.

நகங்களுக்கு நெயில் பொலிஷ் உபயோகப்படுத்துவதால் ஏற்படும் பக்க விளைவுகள் பற்றி தெரிந்துகொள்ளலாம்.

பெண்கள் அனைவரும் தங்களுடைய அழகுக்காக செயற்கை அழகு பொருள்களையே அதிகளவு விரும்பி உபயோகபடுத்துகிறார்கள். குறிப்பாக தாங்கள் உடுத்தும் ஆடைகளுக்கு ஏற்ப நகப்பூச்சுகளை பெண்கள் பயன்படுத்துவது தற்போது ஃபேஷன் ஆகி வருகிறது. கைவிரல் நகங்கள் மற்றும் கால் விரல் நகங்களுக்கு அழகு சேர்க்கும் விதமாக விதவிதமான வண்ணங்களில் மட்டும் அல்லாமல் ஒரே நகத்தில் பல்வேறு வண்ண நெயில் பொலிஷ் பயன்படுத்துகின்றனர். கண்களை கவரக்கூடிய வகையில், இருப்பதால் அனைத்து பெண்களும் இதுபோன்ற நெயில் பொலிஷ் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவதால் அழகுடன், உடல் ஆரோக்கியமும் சேர்ந்து பாதிக்கப்படும் என்பதை பெண்கள் உணர வேண்டும்.

**நெயில் பொலிஷால் ஏற்படும் பிரச்சினைகள்**

நெயில் பொலிஷை அடிக்கடி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். சில வகை நெயில் பாலிஷ்களை அடிக்கடி பயன்படுத்தும் போது நகங்கள் உலர்ந்து மஞ்சள் நிறத்திற்கு மாறத் தொடங்கிவிடும். அதில் சேர்க்கப்படும் பார்மாலிடிகைடு, டிபூட்டல் பத்தாலேட், டோலுன் போன்ற ரசாயனங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை.

- நுரையில் பாதிப்பு
- தலைவலி
- மன அழுத்தம்
- தொற்றுகிருமி ஏற்பட வாய்ப்பு
- மூளை பாதிப்பு
- நகம் தன்னுடைய தன்மையை இழக்கும்
- புற்று நோயை ஏற்படுத்தும்
- தலைவலி

நகங்களின் மென்மை தன்மையை தக்கவைப்பதற்கும், நிறங்களின் பொலிவுக்கும் நெயில் பொலிஷில் டோலுன் என்ற இரசாயனம் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் இது நகத்தின் வழியே ஊடுருவி உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தும்.

நகப்பூச்சை தொடர்ந்து பயன்படுத்தும்போது தலைவலி, மயக்கம், தலைச்சுற்று, குமட்டல், உடல் பலவீனம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

**மன அழுத்தம்**

நெயில் பொலிஷ்களின் ஆயுள் காலத்தை நீட்டிப்பதற்கு பார்மாலிடிஹைடு எனும் இரசாயனம் சேர்க்கப்படுகிறது. இதன் காரணமாக ஒவ்வாமை பிரச்சினை கொண்டவர்கள் பார்மாலிடிகைடு கலந்திருக்கும் நகப்பூச்சுகளை தவிர்ப்பது நல்லது. மேலும், மன அழுத்தம், புற்றுநோய், இதயம் சார்ந்த நோய் பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதிகமாக நகப்பூச்சு பயன்படுத்துபவர்களுக்கு மனஅழுத்தம், கருத்தரிதல் தாமதம், கருவற்ற பெண்களின் வளரும் கருவில் பாதிப்பு, குறிப்பிட்ட திகதிக்கு முன் னதாக பிரசவம் போன்றவை ஏற்படுவதாக ஆய்வில் கூறப்படுகிறது.



**நுரையில் பாதிப்பு**

செயற்கை நகப்பூச்சில் உள்ள வேதிபொருள்களும், அதன் வாசனையும் நகங்கள், தோல், நுரையீரல் மற்றும் மூளைவரை பாதிப்பை உண்டாக்கும். நரம்பு மண்டலம், மூளை போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும் நகப்பூச்சுகளை தவிர்ப்பது நல்லது.



**தொற்றுநோய் ஏற்படும்**

செயற்கையான நகப்பூச்சுகளை அதிகமாக பயன்படுத்தும்போது, நகத்தினை சுற்றியும், தசைபகுதியையும் பாதிக்கிறது. இதனால்நகங்கள்தங்களுடையபளபளப்பு தன்மை இழந்து, எளிதில் உடையும் படி ஆகிவிடும். இவை நகத்தினை மெலிதாக்கி தொற்றுநோய் கிருமிகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

**புற்று நோய் ஏற்படுத்தும்**

நெயில்பொலிஷில்இருந்துவெளிவரும் வாசனைநிறைய பெண்களுக்கு பிடிக்கும். நிறைய பெண்கள் இந்த வாசனையை அதிகமாக நுகர்வார்கள். இது உடலுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். நகப்பூச்சியில் இருந்து வெளிவரும் வாசனை மூக்கு மற்றும் நுரையீரலையும் பாதிக்கும்.

இவ்வாசனையால் மூளை செல்கள் அடிமையாகும் வாய்ப்பும் உள்ளது. இதிலிருந்து வெளிவரும் வாசனையிலுள்ள பார்மால்ஹைடுபுற்றுநோயை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

**நகம் தன்மையை இழக்கும்**

முதலில் நககண்களை குறைத்து, நகங்களை தேய்த்து பின் அதன் மேல் நகப்பூச்சையும், அல்லது நகத்தில் வரை வதோ போன்றவை செய்கின்றனர். இதனால் நகம் வண்மையும், பொலிவும் இழந்து எளிதில் உடைய கூடியவையாகவும் மற்றும் எளிதில் நோய்தொற்றுகளும் ஏற்படும். தோல் நோய்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நகப்பூச்சு மற்றும் செயற்கை நகங்களை வைப்பது, அதில் வேலைபாடுகளுடன் கூடிய நகப்பூச்சை பயன்படுத்த நகங்களை தேய்த்து வைக்கின்றனர். இதனால் நகங்கள் வழுவிழந்து உடையும். எனவே இதுபோன்ற பாதிப்புகளை உண்டாக்கும் செயற்கை நகப்பூச்சுகளை விட்டு விட்டு இயற்கை நகப்பூச்சுகளை பயன்படுத்தலாம்.

**சுவாசக் கோளாறுப் பிரச்சினை**

டிபூட்டல் பத்தாலேட் என்ற ரசாயனம் கலந்த நகப்பூச்சுகள் நகத்திற்கு பொலிவு சேர்க்கும் தன்மை கொண்டவை. இந்த இரசாயணங்கள் நாளமில்லா சுரப்பிகள், சுவாச கோளாறுகள் சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். ஆதலால் இத்தகைய இரசாயனங்கள் கலந்த நகப்பூச்சுகளை தவிர்க்க வேண்டும்.

**நகங்களைப் பராமரித்தல்**

நகங்களை பெரிதாக வளர்க்கும்போது அதில் அழுக்கும், கிருமிகளும் சேர்ந்து, வயிற்று வலி, வாந்தி, பேதி, டைபாய்டு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனால் நகங்களை அடிக்கடி சரியான அளவு வெட்ட வேண்டும். இரவு நேரங்களிலும், பிளேடு போன்றவற்றால் வெட்டாமல், நகவெட்டியைக் கொண்டு நகத்தை வெட்ட வேண்டும்.

பாத்திர சோப்புகள் மற்றும் பவுடர்கள், வேதிப்பொருட்களின் பயன்பாடு, மலம் கழித்த பின்னர், உணவு உண்ணும் முன்பு கைகளை பலமுறை சோப்புபோட்டு கழுவவேண்டும். நகக் கண்களில் உள்ள அழுக்கை அகற்ற வேண்டும். பின்பு மஞ்சள் கலந்த நீரில் நனைத்து எடுத்தால் நல்லது.

அதிக நேரம் தண்ணீரில் வேலை செய்யும்போது நகச்சொத்தை, நகமுடைதல் போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளது. இதிலிருந்து நகங்களை பாதுகாக்க ஈரத்தினை துடைத்துவிட்டு நெய், வெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றை நகங்களில் பயன்படுத்தலாம்.

**இயற்கை நகப்பூச்சின் நன்மைகள்**

இயற்கை நகப்பூச்சை பயன்படுத்துவது நல்லது. ஏனென்றால் இயற்கை நகப்பூச்சை உபயோகிப்பதால் உடல் ஆரோக்கியத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. உடல் ஆரோக்கியம் கூடும். இயற்கை நகப்பூச்சு என்பது மருதாணி தான். மருதாணியை



நகங்களில் பூசுவதால் பூஞ்சை போன்ற நோய்கிருமிகளில் இருந்து நகங்களையும், விரல்களையும் பாதுகாக்கலாம். இது,

- பித்தம் மற்றும் எரிச்சலை குறைக்கும்
- நகங்களை வலிமையாக்கும்
- நோய்த் தொற்றுகளில் இருந்து பாதுகாக்கும்
- தூக்கத்தை தூண்டும்
- மன நிம்மதியளிக்கும்
- விரல் நுனிகளுக்கு சக்தியளிக்கும்

# சருமத்திற்கு அழகு தரும் பச்சை திராட்சை

சருமத்தை மிருதுவாக்கி பொலிவடைய வைக்கிறது பச்சை திராட்சை. தினமும் 4 பச்சை திராட்சையை கைகளால் கசக்கி சாறு எடுத்து, முகத்தில் தடவுங்கள். 10 நிமிடம் கழித்து கழுவினால், சருமம் மிருதுவாகும்.

எண்ணெய்ப் பசை சருமமாக இருந்தால், அரை தேக்கரண்டி பச்சை திராட்சைச் சாறுடன் அரை தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்யுங்கள். இதனால், தோலில் உள்ள அதிகப்படியான எண்ணெயை நீங்கி, பளிங்குபோல் முகம் பிரகாசிக்கும்.

பருத்தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், பருக்கள் வராமலும்



தடுக்கிறது பச்சை திராட்சைச் சாறு. இரண்டு புதினா இலைகளை இடித்து எடுத்த சாறுடன் அரை தேக்கரண்டி கஸ்தூரி மஞ்சள் கலந்து கொள்ளுங்கள். இது பேஸ்ட்டாகும் அளவுக்கு சிறிது திராட்சைச்சாறு, எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசுங்கள். 10 நிமிடம் கழித்து கழுவினால், முகத்தில் இருக்கும் பருக்கள் மறையும். மேற்கொண்டு பருக்கள் வராமல் தடுக்கும். சருமமும் மிருதுவாகும்.

தொய்வடைந்த தோலை இறுக்கமாக்கி, இளமைத் தோற்றம் தருகிறது பச்சை திராட்சைச் சாறு. ஒரு முட்டையின் வெள்ளைக் கருவை ஒரு கிண்ணத்தில் எடுங்கள். அதே அளவுக்கு திராட்சைச் சாறையும் எலுமிச்சைச் சாறையும் எடுத்து, வெள்ளைக் கருவுடன் சேர்த்து நன்றாக அடித்துக் கொள்ளுங்கள். இதை முகம், கழுத்து, கை ஆகிய பகுதிகளில் 'பேக்' ஆகப் போட்டு 20 நிமிடம் காயவிட்டு கழுவுங்கள். பச்சை திராட்சை, சருமத்தை மிருதுவாக்கும். எலுமிச்சைச் சாறு, சருமத்தை சுத்தப்படுத்தும். முட்டை, தொய்வடைந்த தோலை இறுக்கமாக்கும். இதுபோல வாரம் இருமுறை செய்துவர முதுமைத் தோற்றம் மறைந்து இளமை மிளிரும்.

சிவப்பழகை ஜொலிக்கச் செய்யும் தன்மையும் பச்சைதிராட்சைக்கு உண்டு. ஆரஞ்சு பழத் தோலை உலர்த்தி பவுடராக்குங்கள். ஒரு டீஸ்பூன் இந்தப் பவுடருடன், ஒரு டீஸ்பூன் திராட்சை ஜுஸ் கலந்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் பூசி கழுவுங்கள். இப்படிச் செய்வதால் தோலின் முரட்டுத்தன்மை நீங்குவதுடன் நிறமும் கூடும். அழகுக்கு ஆதரவு தருவதில் காய்ந்த திராட்சைக்கும் கணிசமான பங்கு இருக்கிறது. காய்ந்த திராட்சையுடன், பீட்ரூட் சாறை கலந்து தினமும் உதடுகளில் பூசி வர, உதடுகள் கோவைப்பழம் போல சிவக்கும்.

காய்ந்த திராட்சை, பாதாம் பருப்பு இரண்டையும் சம அளவு எடுத்து மிக்ஸியில் அரைத்துக் கொள்ளுங்கள். இதை முகத்தில் பூசி, சிறிது நேரம் ஊறவிட்டு கழுவினால், பேஷியல் செய்தது போல முகம் ஜொலிக்கும்.

# யாழ். பல்கலை மாணவன் மின்சாரம் தாக்கி மரணம்

கிளிநொச்சி – சிவநகர், உருத்திர புரம் பகுதியில் மின்சாரம் தாக்கி யாழ்.பல்கலைக்கழக மாணவனொருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த விக்னராசா சாரங்கன் என்ற இளைஞனே (வயது – 22) உயிரிழந்துள்ளான்.

சிவநகர் பகுதியில் அமைந்துள்ள அந்த இளைஞனின் தந்தைக்கு சொந்தமான அரிசி ஆலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரிசி ஆலையிலுள்ள பகுதி ஒன்றில் வெள்ள நீர் காணப்பட்டுள்ளது. அந்த வெள்ள நீரை மோட்டர் ஊடாக இறைத்து வெளியேற்ற முற்பட்டபோது மின்சாரம் பாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மின்சார தாக்கத்துக்கு உள்ளான இளைஞன் மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவன் உயிரிழந்துள்ளான்.

உயிரிழந்தவரின்சடலம்கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# தேவாலயங்களில் இறுதி.....

(11 பக்கத் தொடர்ச்சி)

தன்னைப் பதவி விலகுமாறும், அவ்வாறு பதவி விலகினால் தனக்கு இராஜதந்திர பதவியொன்றை வழங்குவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தார் என பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர சாட்சியமளித்திருந்தார்.

இறுதியில் என்ன நடந்தது...? அந்த விசாரணைக்குழுவின் அறிக்கையை மைத்திரியார் கிடப்பில் போட்டார்.

போதைவஸ்துக் கடத்தல்காரர்களை எப்படியும் தூக்கிலே தொங்கவிடுவேன் என்று தனது பதவிக்காலத்தின் இறுதிப்பகுதியில் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருந்த அவர், இறுதியில் செய்தவை என்ன..?

ஒரு வெளிநாட்டுப்பெண்ணைத் துடிக்கத்துடிக்கக் கொன்றுவிட்டு மரண தண்டனைக் கைதியாக இருந்த ஒருவருக்கு பொதுமன்னிப்பு அளித்தது தான்!

அதிபர் தேர்தல் நெருங்கியபோது, எதிரணி (ராஜபக்ஷக்கள்) தனது அரசின் மீது பாதுகாப்புத் தொடர்பாக முன்வைத்த விமர்சனங்களினால் கலவரமுற்றிருந்த பதவியிலிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு, அல்பக்கதாதியின் உருவத்தில் ஒரு துரும்பு கிடைத்தது! ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல்பக்தாதி கொல்லப்பட்டார்.

அதனை தனது அரசு கண்டித்ததாம்! ஆனால், நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பொறுப் பேற்கப் போவதாகத் தேர்தல் பிரச்சார மேடைகளில் கூறிக் கொண்டிருக்கும் தரப்பினர் ( ராஜபக்ஷக்கள்) அது தொடர்பாகக் கருத்துக்களைக்கூறுவதற்கு தயங்குவது ஏன்? என கேள்வி எழுப்பியமையுடன், இவர்களுக்கும் அந்தப் பயங்கரவாத அமைப்புடன் ஏதேனும் தொடர்புகள் இருக்கின்றதா என்ற கேள்வி எழுவதாகவும் சொன்னார்.

இறுதியில் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் அதிபர் தேர்தல் முடிந்தவுடன் காட்சிகள் மாறின. காட்சி மாற்றங்களை வழக்கம் போன்று ஊடகங்கள் பக்கம் நிரப்பி, கேலிச் சித்திரங்கள் வரைந்து தனது சேவையை தொடருகின்றன.

ஈஸ்டர்தாக்குதலின் பின்னர் அவசரமாக இலங்கை வந்த பாரதப் பிரதமர் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அதிபர் தேர்தல் முடிந்த மறுகணமே தனது வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை அவசரமாக இலங்கைக்கு அனுப்பி, தனது எஜமான் உங்களுடன் பேச விரும்புகிறார், அவசியம் வாருங்கள் என்று புதிய அதிபருக்கு அழைப்பு விடுத்தார்.

புதியவரும் பதவி ஏற்ற பின்னர் முதலாவது விஜயமாகப் பாரதம் சென்றார். இதற்கிடையில் பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களும் புதிய அதிபரைச் சந்தித்து நடந்த சம்பவங்களுக்கு சரியான – உரிய – விசாரணைகளை நடத்துமாறு கோரியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடந்து ஏழு மாதங்களாகிவிட்டன. இந்நிலையில் முன்னாள் புலனாய்வு பிரிவு அதிகாரிகளின் கம்பி நீட்டும் படலங்கள் தொடங்கியிருக்கின்றன.

அன்று கட்டு வப்பிட்டிய தேவாலயத்திற்குச் சென்று, மெழுவர்த்திகளை ஏற்றி, மரணித்த ஆத்மாக்களின் சாந்திக்காகப் பிரார்த்தித்தேன்.

குண்டு வெடிக்கப்பட்ட இடத்தை கண்ணாடியால் சட்டமிட்டு நினைவிடமாக்கியிருந்தார்கள். அதன் முன்னால் கனத்த மனதுடன் சில நிமிடங்கள் நின்றேன். இந்த இடத்தில்தான் பேராயர் மல்கம் ரஞ்சித் தனது பரிவாரங்களுடன் வந்துதாள் பணிந்து அஞ்சலி செலுத்தினார்.

திருத்த வேலைகளுக்குப் பின்னர் தேவாலயம் பொலிவுடன் காட்சியளிக்கிறது.

பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வு பொலிவிழந்துவிட்டது.

மீண்டும் கொல்லப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் தாங்கிய காட்சிப் பலகையின் முன்பாக வந்தேன்.

அங்கு நின்ற ஒரு முதியமாது, அதனைப் பார்த்தவாறு, 'இவர்களைக் கொன்றவர்களுக்கும் எங்கள் ஆண்டவர் பாவ சங்கீர்த்தனம் கொடுப்பார்.' – எனப் பெருமுச் செறிந்து சொன்னதைக் கேட்டேன்.

ஆம்..! அவரின் ஆண்டவர், ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்றுதானே சொல்லியிருக்கிறார்!

எனக்கு உடனே இலக்கிய நண்பர் ஷோபாசக்தி எழுதிய CROSS FIRE என்ற சிறுகதை நினைவுக்கு வந்தது. இந்தப் பத்தியின் தொடக்கத்தில் குறிப்பிட்ட 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் கொல்லப்பட்ட தியாகராஜா மகேஸ்வரன் பற்றிய கதை அது. ஷோபாசக்தி அதனை தனது பிரத்தியேக பாணியில் எழுதியிருப்பார்.

அதன் இறுதிப் பந்தியில் உபுல் கீர்த்தி என்ற பத்திரிகையாளரிடம் சிவபாலன் என்பவர் இவ்வாறு ஒரு கேள்வியை முன்வைப்பார்:

அது மகேஸ்வரனுக்கு வைக்கப்பட்ட இலக்குத்தானா? அல்லது வேறு யாருக்காவது வைக்கப்பட்ட இலக்கில் மகேஸ்வரன் தவறுதலாக சிக்கினாரா..?

இந்த எதிர்பாராத கேள்வியினால் பத்திரிகையாளர் உப்புல் கீர்த்தியிடமிருந்து, 'அது கடவுளுக்கு வைக்கப்பட்ட இலக்கு. கும்பிடப்போன மகேஸ்வரன் குறுக்கே மாட்டிக் கொண்டார்.' – என்று பதில் வரும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிர் நீத்தவர்கள் அரசியல்வாதிகளின் தேர்தல் பிரசார உத்திகளுக்கு பயன் பட்டார்கள். அவர்களின் வாழ்வும் கதைகளாக எழுதப்படும்.

அவ்வளவு தான்!

# இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்படவேண்டும்

## செல்வம் எம்.பி. கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ, 30

இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்கின்றமை, இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்திய விஜயத்தின் போது இலங்கைச் சிறையில் உள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிப்பதாகத் தெரிவித்துள்ள கருத்தை நான் வரவேற்கின்றேன்.

அதேவேளை எமது மீனவர்களும் அவர்களுடைய படகுகளுடன் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலமாக சிறை வைக்கப்பட்டுள்ள இவர்களின் விடுதலை தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இவர்களின் குடும்பங்கள் இவர்களின் உழைப்பிலேயே தங்கியுள்ளன. இம் மீனவர்கள் சிறைப்பட்டுள்ளமையினால் அவர்களின் குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளைஎதிர்நோக்கி வருகின்றன.

பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி கேள்விக் குறியாகியுள்ளது. மேலும் பல லட்சம் ரூபாக்களை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட படகுகள் போதிய பராமரிப்பு இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினால் பாவனைக்கு உதவாத நிலைக்கு தள்ளப்படுகின்றன. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையில் அச்சத்தின் மத்தியிலேயே எம் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்களை விடுவிக்கின்ற அதேவேளை சிறைப்பட்டிருக்கின்ற எம் உறவுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் விடுதலை தொடர்பிலும் இந்திய அரசுடன் பேசி அவர்களையும், படகுகளையும் மீட்டுத்தர வேண்டும் – என்றுள்ளது. (ஐ)



# ஒற்றுமையாகச் செயற்படாவிட்டால் தமிழர் இருப்பு கேள்விக்குறியாகும்!

## கோடீஸ்வரன் எம்.பி. எச்சரிக்கை

அம்பாறை, டிசெ. 01

தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படாவிட்டால், தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகிவிடுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகப் போராடும் எனவும் அவர் கூறினார்.

கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – வடக்கு – கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் எங்களுக்குப் பாரப்படுத்திய விடயம் இனப்பிரச்சினைக்கானதீர்வாகும்.

அந்த வகையில் இனப் பிரச்சினைக்கான தீர்வை உடனடியாக எட்டவேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

மேலும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தேசிய ரீதியில் மாத்திரமல்லாது சர்வதேச ரீதியிலும் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

தமிழர்களின் இனப் பிரச்சினை சார்ந்த விடயங்களைத் தீர்ப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர எந்தக் கட்சியும் முன்னிருக்கப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர்களின் பலம் என்பதைத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.



கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுகின்ற விடயம் தொடர்பாக நாங்கள் பல தரப்பட்ட பேச்சுக்களில் கலந்து கொண்டு நாடாளுமன்றத்திலும் குரல் கொடுத்தோம்.

அதனூடாக கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை நாங்கள் வெளி உலகத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியானது ஒவ்வொரு கால கட்டத்திலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருவோம் என்று பல வாக்குறுதிகளை தந்தது. பல ஒப்பந்தங்களைச் செய்தது. இறுதியில் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டது.

அதேபோன்று தற்போது ஆட்சிக்கு வந்துள்ள கோட்டாபய தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியும் ஏமாற்றி வருகிறது.

ஆனாலும் நாங்கள், தொடர்ச்சியாக கல்முனை பிரதேச செயலக விடயம், அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க கடைசி வரை போராடுவோம் – என்றார். (ஐ)

## கட்சி உறுப்பினர்களை சந்திக்கவுள்ளார் ரணில்

கொழும்பு, டிசெ. 01

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் சில தினங்களில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவராக சஜித் பிரேமதாஸவும், கட்சியின் உதவித் தலைவராக ரவி கருணாநாயக்கவும் நியமிக்கப்படவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தல்; கண்டிக்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, டிசெ. 01

கோட்டபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து இடம்பெற்ற சம்பவங்களுக்கு சஜித் பிரேமதாஸ கண்டனம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சுவிஸ் தூதரக அதிகாரியொருவர் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டமை, பொலிஸ் அதிகாரிகள் மீது அரசியல் பழிவாங்கல் மற்றும் ஊடகவியலாளர்களை மிரட்டும் செயற்பாடுகள் தொடர்பில் அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் தேர்தலின்போது கோட்டாபய அளித்த உறுதிமொழிகளுக்கு முரணானவை என்று சுட்டிக்காட்டிய அவர், பழிவாங்கும் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் அரசை வலியுறுத்தினார்.

அத்தோடு இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பக்கசார்பற்ற விசாரணை வேண்டும் என்றும், தூதரக அதிகாரி



கடத்தப்பட்டமை இராஜதந்திர உறவுகளின் வரலாற்றில் கறுப்பு நாள் எனவும் சஜித் குறிப்பிட்டுள்ளார்.

சில சம்பவங்கள் நடைபெறுவதைப் பார்த்துக் கொண்டு எதிர்க்கட்சி இனிமேல் அமைதியாக இருக்காது என்றும் அவர் கூறினார். (ஐ)

## வடக்கில் படை முகாம்கள் ஒருபோதும் அகற்றப்படா

### பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 01

வடக்கில் ஒருபோதும் இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாதெனப் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தின நிகழ்வுகளால், எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– அரசு என்ற ரீதியில் யாரையும் அச்சுறுத்தவேண்டியத் தேவை எமக்குக் கிடையாது. கடந்த அரசின் காலத்தில் மாவீரர்களை நினைவுக்கூர அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இதற்கு உடனடியாகத் தடை விதிப்பது தேவையில்லாத பதற்றத்தை ஏற்படுத்தும். அது முறையும் அல்ல.

எனவே, நாம் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்போம். மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளின்போது எந்தவொரு சட்டத்துக்கு எதிரான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

அந்த மக்கள் இறந்தவர்களைத்தான் நினைவு கூர்ந்தார்கள். இது ஜனநாயகநாடாகும். அந்தவகையில், பாதுகாப்புக்கு ஏதும் அச்சுறுத்தல் ஏற்படுமானால், நாம் பொலிஸாரின் ஊடாகத்தான் நடவடிக்கையெடுப்போம்.

பொலிஸாரால் நிலைமையை கட்டுப்படுத்த முடியாது போனால், விசேட பொலிஸ் அதிரடிப் படையினரைக் களமிறக்குவோம். இந்த இரண்டு தரப்பினராலும் ஒரு நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போனால் மட்டும்தான் நாம் இராணுவத்தை பயன்படுத்துவோம்.

இந்த நாட்டின் சட்டக் கட்டமைப்புக்கு இணங்கவே அனைத்தும் முன்னெடுக்கப்படும். நாம் வடக்கு மக்களுக்காக இன்னும் நிறைய சேவைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஒத்துழைப்பும் எமக்கு அவசியமாகிறது. ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் மஹிந்த கடந்த காலங்களில் வடக்கு –கிழக்கு மக்களுக்காக நிறைய வேலைத் திட்டங்களைமேற்கொண்டுள்ளார்கள்.

இதனை எதிர்காலத்திலும் மேற்கொள்ளக் கூட்டமைப்பினரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அப்போது மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் உயரும்.

அதேநேரம், நாம் எந்தக் காரணம் கொண்டும் இராணுவ முகாம்களை இல்லாது செய்யமாட்டோம். அரசுக்கு நாட்டின் பாதுகாப்பு முக்கியமாகும்.

இராணுவ முகாம்கள் இருப்பதால் பொது மக்களுக்கு எந்தவொரு சிரமமும் ஏற்படப்போவதில்லை. எனவே, யாருடைய தேவைக்காகவும் நாம் இராணுவ முகாம்களை வடக்கிலிருந்து அகற்ற மாட்டோம்.

எமக்கு இனவாதமோ மதவாதமோ கிடையாது. அனைத்து மக்களையும் பாரபட்சம் பாராது பாதுகாக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும் – என்றார். (ஐ)

## ஆரம்பப் பிரிவுகளுக்கு 50 ஆயிரம் ஆசிரியர்கள்

### இணைக்க இடைக்கால அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 01

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாக 2020ஆம் ஆண்டில் சகல பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவுகளுக்காக ஆசிரிய உதவியாளர்கள் 50 ஆயிரம் பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்த்த தெரிவித்துள்ளார்.

ஹோமாகம ஆட்டிக்கல கனிஷ்ட வித்தியாலயத்தில் சீரமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். (ஐ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இன்று வவுனியாவில் கூடுகிறது

வவுனியா, டிசெ. 01

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூடவுள்ளது.

சமகால அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே மத்திய குழு கூடவுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையில் காலை 10 மணிக்கு கூடவுள்ள மத்தியகுழு கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர் மாநாடும் இடம்பெறவுள்ளது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2019 இல் வெளியிடப்பெற்றது.